[illegible]

V6 No. 66 20 April 1933

JL
[illegible] 24, M128 KM
M33·6.16
189149

KALANILAYAM தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஞ ஏப்ரல் மீ 20உ [No. 16

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 301
2. தமிழ்ப் பாடம் (நளவெண்பா - கலிநீங்கு காண்டம்) 303
3. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 9-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 305
4. தேவகி (ஓர் நாவல்) K. இராஜகோபாலன் 307
5. கனவு (ஓர் கதை) K. R. குருஸ்வாமி ரெட்டியார், M.A. 309
6. காற்று மழை (அங்கம் 1. களம் 2.) Shakespeare's - Tempest 311
7. அப்பர் (64 கலைகள்-வியாகரணம்-உயிரளபெடை) E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 312
8. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்) T. N. சேஷாசலம், B.A., B.L. 313
9. யாப்பிலக்கணம் (செய்யுள்-கலிப்பா) வித்துவான் M. V. வேணுகோபாலப் பிள்ளை 314
10. திருக்குறள் நீதி—(காமத்துப்பால்-களவியல்) A. இராமலிங்கம் 315
11. வர்த்தமானம் 319

கலாநிலயம்

சமயச் சாந்தி.

தண்ணளி தழைக்குந் தமிழின் பெயரினால் புன்சில
செய்வார் புந்தியை யென் சொல.

ஏனைய மதங்கள் எவ்வாறாயினும் தமிழினைத் தொடர்ந்து செய்கின்ற சமயப்பிணக்குக்களின் வன்மம் வேறெதற்குமில்லை எனலாம். "நஞ் சைவசமயம் நஞ் சைவசமயம்" என்றென்று விளம்பி, பிறமதத்தினரையும் பிறமொழியினையும் ஏனையோர் வழிபடு கடவுளர்களையும் அவர், தகவுந்தருக்கமுமின்றிப் பேசும்வண்ணம் எத்தகையதென்பதை எடுத்துரைத்தல் மிகை. சைவசித்தாந்தத்தின் ஆதரவின்கீழ் நடக்கின்ற மகாநாடுகளுக்குச் சென்றிருப்பவர் யாவரும் இவ்வன்மத்தின் கொடுமையை நன்கு அறிந்திருப்பார். வைணவ மகா சபைகளின்வாதங்கள், சைவசித்தாந்தச் சங்கங்களின் ஆர்வத்திற்குக் குறைந்ததன்றாயினும். அதனிற்கிது ஒருவாறு ஆற்றத்தகுந்ததே என்று எண்ணல் வேண்டும். அந்தக் குரூரம் இதற்கு மிருக்கலாம், எனினும் அந்தப் பரிபவம் இதற்கில்லை. தமிழோடு வடமொழியையுஞ் சார்ந்து நிற்பதால் வைணவர் தம் வாய்க்கு ஓர் வரம்பு வைத்துக்கொள்ள நேர்கின்றனர் போலும். தனித்தமிழ் என்னும் முழக்கிடையே பேசப்படுகின்ற வழக்கின் வன்மத்தைக் கண்டு ஏனைய கடவுளர்களுக் கிரங்குவதன்முன்னர்த் தண்தமிழ்க் குற்ற கதியைக் கருதியே நல்லோர் மனம் மிக உளையும். ஏனெனில், தண்ணறுந் தமிழ்மொழியைத் தம்மனத்தே கொண்டவர் இக்கொடுமை ஒருபோதுஞ் செய்தலாகாது. திருக்குறளையும் அகநானூறு புறநானூறு செய்யுள்களையும் நாலடியாரையும் இறையனாரகப்பொருளையும் கம்ப இராமாயணத்தையுந் தந்தவோர் தமிழினை மிழற்றியும், அன்பேனும் அறமேனும் இன்றிக் கொடியன உரைப்பாராயின், அப்புறம் தமிழ்ப் பயிற்சிக்கோர் மேன்மையும் மனிதர் மனத்தைப்பண் செய்ய வல்லதொரு சால்பும் உளவென்று சனங்கள் முன் சாற்றுதற்கு வாயில்லாமற் போகின்றதே. மற்றையோர்க்கில்லாத தமிழைத் தமதாகப் பெற்றிருந்தும் அதனை இப்படிப் பரிபவத்திற்கு இலக்காய்க் காட்டிக் கொடுத்துவிடலாமா.

இச்செவ்வியில், பிரான்ஸ்தேயத்து வித்தகர், ஜீன் ஜாக்ஸ் ரோஸ்ஸோ (Jean Jacques Rousseau) என்பவர், கடவுள் கருத்தும் மானுட வாழ்க்கையும் கலந்திருக்க வல்லதோர் நிலையைக் காட்டும் சில வாக்கியங்கள் மதித்துணர்தற் குரியனவாம்.

Why is my soul subjected to my senses, and imprisoned in this body by which it is enslaved and thwarted? I know not; have I entered into the counsels of the Almighty? But I may without rashness, venture on a modest conjecture. I say to myself: If man's soul had remained in a state of freedom and innocence, what merit would there have been in loving and obeying the order he found established, an order which it would not have been to his advantage to disturb? He would be happy, no doubt, but his happiness would not attain to the highest point, the pride of virtue, and the witness of a good conscience within him; he would be but as the angels are, and no doubt the good man will be more than they. Bound to a mortal body, by bonds as strange as they are powerful, his care for the preservation of this body tempts the soul to think only of self, and gives it an interest opposed to the general order of things, which it is still capable of knowing and loving; then it is that the right use of his freedom becomes at once the merit and the reward; then it is that it prepares for itself unending happiness, by resisting its earthly passions and following its original direction.

If even in the lowly position in which we are placed during our present life our first impulses are always good, if all our vices are of our own making, why should we complain that they are our masters? Why should we blame the Creator for the ills we have

ourselves created, and the enemies we ourselves have armed against us? Oh, let us leave man unspoilt; he will always find it easy to be good and and he will always be happy without remorse. The guilty, who assert that they are driven to crime, are liars as well as evil-doers; how is it that they fail to perceive that the weakness they bewail is of their own making; that their earliest depravity was the result of their own will; that by dint of wishing to yield to temptations, they at length yield to them whether they will or no and make them irresistible? No doubt they can no longer avoid being weak and wicked, but they need not have become weak and wicked. Oh, how easy would it be to preserve control of ourselves and of our passions, even in this life, if with habits still unformed, with a mind beginning to expand, we were able to keep to such things as we ought to know, in order to value rightly what is unknown; if we really wished to learn, not that we might shine before the eyes of others, but that we might be wise and good in accordance with our nature, that we might be happy in the performance of our duty. This study seems tedious and painful to us, for we do not attempt it till we are already corrupted by vice and enslaved by our passions. Our judgments and our standards of worth are determined before we have the knowledge of good and evil; and then we measure all things by this false standard, and give nothing its true worth.

To raise myself so far as may be even now to this state of happiness, strength, and freedom, I exercise myself in lofty contemplation. I consider the order of the universe, not to explain it by any futile system, but to revere it without ceasing, to adore the wise Author, who reveals himself in it. I hold intercourse with him; I immerse all my powers in his divine essence; I am overwhelmed by his kindness, I bless him and his gifts, but I do not pray to him. What should I ask of him—to change the order of nature, to work miracles on my behalf? Should I, who am bound to love above all things the order, which he has established in his wisdom and maintained by his providence, should I desire the disturbance of that order on my own account? No, that rash prayer would deserve to be punished rather than to be granted. Neither do I ask of him the power to do right; why should I ask what he has given me already? Has he not given me conscience, that I may love the right, reason, that I may perceive it, and freedom, that I may choose it? If I do evil, I have no excuse; I do it of my own free will; to ask him to change my will is to ask him to do, what he asks of me; it is to want him to do the work, while I get the wages; to be dissatisfied with my lot is to wish to be no longer a man, to wish to be other than what I am, to wish for disorder and evil. Thou source of justice and truth, merciful and gracious God, in thee do I trust, and the desire of my heart is—Thy will be done. When I unite my will with thine, I do what thou doest; I have a share in the goodness; I believe, that I enjoy beforehand the supreme happiness, which is the reward of goodness.

In my well-founded self-distrust the only thing that I ask of God, or rather expect from his justice, is to correct my error if I go astray, if that error is dangerous to me. To be honest I need not think myself infaliable; my opinions, which seem to me true may be so many lies; for what man is there who does not cling to his own beliefs; and how many men are agreed in everything? The illusion which deceives me may indeed have its source in myself, but it is God alone who can remove it. I have done all I can to attain to truth; but its source is beyond my reach; is it my fault if my strength fails me and I can go no further; it is for Truth to draw near to me.

"The novelty of the sentiments you have made known to me," said I, "strikes me all the more because of what you confess you do not know, than because of what you say you believe. They seem to me very like that theism or natural religion, which Christians profess to confound with atheism or irreligion which is their exact opposite. But in the present state of my faith I should have to ascend rather than descend to accept your views, and I find it difficult to remain just where you are unless I were as wise as you. That I may be at least as honest, I want time to take counsel with myself. By your own showing, the inner voice must be my guide, and you have yourself told me that when it has long been silenced it cannot be recalled in a moment. I take what you have said to heart, and I must consider it. If after I have thought things out, I am as convinced as you are, you will be my final teacher, and I will be your disciple till death. Continue your teaching however; you have only told me half what I must know. Speak to me of revelation, of the Scriptures, of those difficult doctrines among which I have strayed ever since I was a child, incapable either of understanding or believing them, unable to adopt or reject them."

"Yes, my child," said he, embracing me, I will tell you all I think; I will not open my heart to you by halves; but the desire you express was necessary before I could cast aside all reserve. So far I have told you nothing but what I thought would be of service to you, nothing but what I was quite convinced of. The inquiry which remains to be made is very different. It seems to me full of perplexity, mystery, and darkness; I bring to it only doubt and distrust. I make up my mind with trembling, and I tell you my doubts rather than my convictions. If your own opinions were more settled I should hesitate to show you mine; but in your present conditions, to think like me would be gain. Moreover, give to my words only the authority of reason; I know not whether I am mistaken. It is difficult in discussion to avoid assuming sometimes a dogmatic tone; but remember in this respect, that all my assertions are but reasons to doubt me. Seek truth for yourself; for my own part I only promise you sincerity.

In my exposition you find nothing but natural religion; strange that we should need more! How shall I become aware of this need? What guilt can be mine so long as I serve God according to the knowledge he has given to my mind, and the feelings he has put into my heart? What purity of morals, what dogma useful to man and worthy of its author, can I derive from a positive doctrine, which cannot be derived without the aid of this doctrine by the right use of my faculties? Show me what you can add to the duties of the natural law, for the glory of God, for the good of mankind, and for my own welfare; and what virtue you will get from the new from of religion, which does not result from mine. The grandest ideas of the Divine nature come to us from reason only. Behold the spectacle of nature; listen to the inner voice. Has not God spoken it all to our eyes, to our conscience, to our reason? What more can man tell us? Their revelations do but degrade God, by investing him with passions like our own. Far from throwing light upon the ideas of the Supreme Being, special doctrines seem to me to confuse these ideas; far from ennobling them, they degrade them; to the inconceivable mysteries which, surround the Almighty, they add absurd contradictions, they make man proud, intolerant, and cruel; instead of bringing peace upon earth, they bring fire and sword, I ask myself what is the use of it all, and I find no answer. I see nothing but the crimes of men and the misery of mankind.

"They tell me a revelation was required to teach men how God would be served; as a proof of this they point to the many strange rites, which men have instituted, and they do not perceive, that this very diversity springs from the fanciful nature of the revelations. As soon as the nations took to making God speak, every one made him speak in his own fashion, and made him say what he himself wanted. Had they listened only to what God says in the heart of man, there would have been but one religion upon earth.

தமிழ்ப் பாடம் 66.

நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[293-வது பக்கத் தொடர்ச்சி]

தன் நாயகன் தானோ இவ் வாகுகன் என்பதைப் பின்னும் சோதித்தறியும் பொருட்டுத் தமயந்தி செய்த சூழ்ச்சியின்படி தன் அருந்தனைத்த மக்களைக் கண்ட நளன், ஆர்வத்தோடு அவர்களுடன் உசாவிய அழகை இனிவரும் சில செய்யுள்களிற் காண்கின்றோம். அருமையான வொரு நாடகநிலையைப் புகழேந்தி இங்கு மிக்க திறமையோடு கையாண்டிருக்கின்றார்.

மக்களைமுன் கண்டு மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள்நீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென் றுரைத்தான்
வன்மக் களியானை மன். [தான்

பதப்பிரிவு:—மக்களை முன் கண்டு மனம் நடுங்கா வெய்து உயிரா புக்கு எடுத்து வீரம் புயத்து அணையா மக்காள் நீர் என் மக்கள் போல்கின்றீர் யார் மக்கள் என்று உரைத்தான் வன்மம் களி யானை மன்.

பதவுரை.

வன்மம் - க்ஷாத்திரம் மிகுந்த
களி - மதங்கொண்ட
யானை - யானைகளை உடைய
மன் - மன்னனாகிய நளன்,
மக்களை - (தன்னுடைய) மக்களை
முன் - எதிரே
கண்டு - கண்டு,
மனம் - மனமானது
நடுங்கா - நடுங்கி,
வெய்து - வெப்பமாக
உயிரா - பெருமூச்சு விட்டு,
புக்கு - புகுந்து
எடுத்து - எடுத்து (தன்)
வீரம் - வீரம் மிகுந்த
புயத்து - தோள்களில்
அணையா - அணைத்து,
"மக்காள் - மக்களே,
நீர் - நீங்கள்
என் - என்னுடைய
மக்கள் - மக்களை
போல்கின்றீர் - போல இருக்கின்றீர்,
யார் - யாருடைய
மக்கள் - பிள்ளைகள்?"
என்று - என்று
உரைத்தான் - சொன்னான்.

விரிவுரை—மக்களைக் கண்டவுடன் நளனுடைய மனம் பதைத்துருகிக் குழம்பிப்போயிருக்கவேண்டும். இல்லையெனில் தேர்ப்பாகனாக நடிக்கின்ற ஒருவன் அரசமக்களை எடுத்துத் தன் மார்போடணைத்துக் கொள்ளத் துணிந்திருக்கமாட்டான். செய்கை இவ்விதம் தடுமாறியதல்லாமல் அவன் சொற்களுந் தடுமாறுகின்றன. பாகனாயிருக்குமவன் தன்னைத்தானு மறியாமல் மன்னர்குல மக்களை நோக்கி, "என்மக்கள் போல்கின்றீர்" என்று கூறிவிட்டான். இவ்வாறு கூறுவது தக்கது அன்றென அவனுக்கே தோன்றியிருக்க வேண்டும். ஆகையால், "யார்மக்கள்?" என்று விரைந்து வினவலாயினன். இப்படிக் கூறாமல், "மக்காள் நீர் யார்மக்கள்" என்ற மட்டிலே நளன் மக்களை நோக்கி வினவியதாகக் கொள்வதும் பொருந்தும். "என் மக்கள் போல்கின்றீர்" என்ற சொற்களை நளன் இடையிலே, அவர் செவியிற் படாதபடி தனக்குள்ளேயே மெல்லச் சொல்லிக்கொண்டிருக்கலாம். ஒரு பிள்ளையைப் பார்த்து ஒருவன், "பிள்ளாய், உன்னைப் பார்க்கும்பொழுது என்னுடைய மகன்போலத் தோன்றுகின்றாய்; மற்று யாருடைய பிள்ளை" என்று கேட்பது சிறிது ஒழுக்கிற்கு விரோதமாகக் காண்கின்றது. பலகாலம் பிரிந்திருந்த குழந்தைகளைப் பார்த்த ஆர்வத்தால் நளன் இப்படிக் கூறிவிட்டான் என்று எண்ணுவது பொருந்துமாயினும், "என் மக்கள் போல்கின்றீர்" என்னும் சொற்களை அம் மக்களுக்கு விளம்பாமல் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்கின்ற பொருள் சிறிது சிறந்து நிற்கின்றது.

மன்னன் விடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னை தனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோ மெங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றா னென்றா ரழுது. 59

பதப்பிரிவு:—மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள் யாம் அன்னை தனை கான் விட்டு அவன் ஏக இ நகர்க்கே வாழ்கின்றோம் எங்கள் வளநாடும் மற்று ஒருவன் ஆள்கின்றான் என்றார் அழுது.

பதவுரை.

"யாம் - நாங்கள்
நிடதத்தார் - நிடத தேசத்தவர்களுக்கு
மன்னன் - மன்னனுடைய
மக்கள் - பிள்ளைகள்
(வாழ் - வாழ்கின்ற
வேந்தன் - அரசன் அவன்)
அன்னை தனை - எங்களுடைய தாயை
கான் - காட்டில்
விட்டு - விட்டுவிட்டு
அவன் - அம்மன்னன்
ஏக - போய்விட்டதால்
இ - இந்த
நகர்க்கே - நகரத்திலேயே
வாழ்கின்றோம் - வசித்து வருகின்றோம்.
எங்கள் - எங்களுடைய
வளம் - வளப்பம்பொருந்திய
நாடும் - நாட்டையும்
மற்றொருவன் - வேறொருவன்
ஆள்கின்றான் - ஆள்கின்றான்.
என்றார் அழுது - என்று அழுதார் (அம்மக்கள்.)

விரிவுரை:—'வாழ்வேந்தன்' என்பது, அம்மக்கள் தம் வாசகத்தினிடையே தந்தையின் நினைவை வாழ்த்துவதால் வந்தது. "எங்கள் தந்தை எந்த நிலையிலிருந்தாலும், என்ன காரியம் செய்தாலும், கேடு அடைந்தவன் ஆகமாட்டான்" என்பது அச்சொற்களின் குறிப்

பாகும். "எங்கிருப்பினும் எம் தந்தை வாழ்க" என அச்சிறுவர் வழுத்துகின்றனர்.

மக்கள் இருவரும் ஒரேவிதமாக ஒரே சொற்களைச் சொல்லியிருத்தல் இயற்கையன்று. ஆதலின், "மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள் யாம், அன்னைதனைக் கான்விட்டு அவன் ஏக இந்நகர்க்கே வாழ்கின்றோம்" என்ற வரையில் இந்திரசேனை சொன்னதாகவும், அதனைத் தொடர்ந்து "எங்கள் வளநாடும் மற்றொருவன் ஆள்கின்றான்" என்று இந்திரசேனன் கூறி முடித்ததாகவும் கொள்ளலாம்.

இந்த இந்திரசேனனும் இந்திரசேனையும் சொல்கின்ற பதிலால் தம் பிள்ளைமதியின் இயற்கையை நன்றாகக் காட்டுகின்றனர். நளன் கேட்டது, "நீங்கள் யார் மக்கள்" என்பதுதான். அதுவரையில் தாம் இன்னார் மக்கள் என்பதை மாத்திரம் உரைப்பது போகத், தமது அன்னையை அவன் காட்டில் விட்டுப்போனதும் தங்கள் வளநாட்டை இன்னொருவன் ஆள்வதும் யாவும் கூறிவிடலாயினர். வயது சிறிது ஆனவர்களாயின் அயலானொருவனிடத்தில் தமது தாழ்மையை இவ்விதம் சொல்லிக்கொள்ளமாட்டார். தம்மிடம் சிறிது பரிவு காட்டுகின்றவர்களைக் கண்டால், சிறு பிள்ளைகள் அவர்களிடத்தில் எல்லாவற்றையும் விளம்பிவிடுவது இயல்பு. அதுவுமன்றிச் சிறுவர்களாவார், உரைக்கவேண்டியது எது, மறைக்க வேண்டியது எது, என்பது ஓராமல், அயலார் முன்னிலையில் அவமானத்திற் கிடமானவைகளைச் சொல்லிவிடுவதும் உலக அநுபவம்.

ஆங்கவர் சொன்ன வுரைக்கேட் டழிவெய்தி
நீங்கா வுயிரோடு நின்றிட்டான்—பூங்காவில்
வள்ளம்போற் கோங்கு மலருந் திருநாடன்
உள்ளம்போற் கண்ணீ ருகுத்து. 60.

கருத்து:—மக்கள் தம் உரைகேட்ட நளன், மனம் உருகிக் கண்ணீர் சொரிந்து நின்றான்.

இலக்கணம்

வாக்கியத்திலுள்ள வார்த்தைகள் ஒன்றை ஒன்று தொடர்கின்றபோது, அவ்வாறு தொடர்கின்ற நிலைமொழி வருமொழி என்னும் இரண்டு வார்த்தைகளுக்கிடையே ஏதேனும் தொக்கு இருக்குமாயின், அவ்விரண்டு வார்த்தைகளும் சேர்ந்து ஆன அந்தச் சொற்றொடரைத் தொகைநிலைத் தொடர் என்றும் அவைகளுக்கிடையே யாதொன்றும் தொக்கு இராதாயின் அதனைத் தொகாநிலைத்தொடர் என்றும் கூறுவார்.

இத் தொகாநிலைத்தொடர்கள் (அடுக்குத் தொடரைத் தவிர) நிலைமொழிகளைக் கருதி ஒன்பது வகைப் படுகின்றன. நிலைமொழி பெயர்ச்சொல்லாக இருக்கலாம், அல்லது வினைச்சொல்லாக இருக்கலாம், அல்லது இடைச்சொல்லாக இருக்கலாம், அல்லது உரிச்சொல்லாக இருக்கலாம்.

பெயர்ச்சொல்லா யிருக்குமாயின் அந்நிலைமொழி என்ன வேற்றுமை அடைந்திருக்கின்றது என்பதைப் பார்க்கவேண்டும்.

இராமன் வந்தான், என்னும் வாக்கியத்தில் இராமன் என்ற நிலைமொழி முதல் வேற்றுமைப் பெயர்ச்சொல். முதல்வேற்றுமையி லிருக்கின்ற சொற்களை எழுவாயாக வழக்கூடும். இங்கு நிலைமொழி எழுவாயாய் இருத்தலால், இராமன் வந்தான் என்னும் அவ்விரண்டு வார்த்தைகளும் சேர்ந்து எழுவாய்த்தொடர். அப்படியே, கோழி கூவியது, மரங்கள் வளர்ந்தன, முதலியன எழுவாய்த்தொடர்கள். நிலைமொழி முதல் வேற்றுமைப் பெயர்ச்சொல்லாக வருகின்ற தொடர்களை முதல்வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் என அழைக்கின்ற வழக்கம் இல்லை: எழுவாய்த்தொடர் என்றே கூறுவார். அவ்விதமே நிலைமொழிப் பெயர்ச்சொல் எட்டாம் வேற்றுமையில் இருக்குமானால், அத்தொடரை விளித்தொடர் என்று சொல்வார்; எட்டாம்வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் என்று சொல்வதில்லை. அண்ணா வா; மாதர்காள் எங்குப் போகின்றீர்; மக்காள் நீர்; என்பவைகளில் நிலைமொழிகள் எட்டாம் வேற்றுமையில் இருந்து கூப்பிடப்படுகின்ற பொருளைத் தருகின்றன. விளித்தல் என்றாலும் கூப்பிடுதல் என்றாலும் ஒரே அர்த்தந்தான். ஆதலால், முதல் வேற்றுமையை, எழுவாய் என்பதுபோல், எட்டாம்வேற்றுமையை விளி என்று கூறுவார். எனவே நிலைமொழி எட்டாம்வேற்றுமைப் பெயர்ச் சொல்லாகி நடக்கின்ற தொடர், விளித்தொடர்.

எட்டு வேற்றுமைகளில் இவ்விரண்டும் இவ்வாறு போக, நிலைமொழி, இரண்டுமுதல் ஏழுவரையில், உள்ள ஆறுவகை வேற்றுமைகளில் ஏதேனும் ஒன்றை அடைந்து அவ்வேற்றுமைக்குரிய உருபும் மறையாமல் விரிந்தும் இருக்குமானால், அப்பொழுது அத்தொடர்களை வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் என்று அழைப்போம். அதுவன்றி நிலைமொழி எவ்வெவ் வேற்றுமை உருபுபெற்று நிற்கின்றதோ, அவ்வவ் வேற்றுமையின் பேரையும் சேர்த்து, இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர், மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர், நான்காம் ஐந்தாம், ஆறும், ஏழாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் என்றும் சொல்வதுண்டு.

உதாரணங்கள்:—

குதிரையைஓட்டினான்:—இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

கத்தியால் வெட்டினான்:—மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

எனக்குக் கொடுத்தான்:—நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

மலையின் இறங்கினான்:—ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

இராமனது வில்:— ஆறும் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

வீட்டில் இருந்தான்:— ஏழாம்வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

இவைகளிலெல்லாம் வேற்றுமை உருபு மறையாமல் விரிந்து வந்திருக்கின்றன.

ஆதலின், தொகாநிலைத்தொடர்களில் நிலைமொழி பெயர்ச்சொல்லா யிருக்குமானால் அத்தொடர், எழுவாய்த்தொடராகவாவது விளித்தொடராகவாவது அல்லது இரண்டு முதல் ஆறுவரையிலுள்ள வேற்றுமைகளில் எதாவது ஒரு வேற்றுமைத் தொடராகவாவது இருக்கலாம். இன்னதொடர் இது என்று அறிவதற்கு நிலைமொழியைத்தான் கவனிக்கவேண்டும்; வருமொழியைப் பற்றிக் கருத வேண்டியதேயில்லை.

இனி, நிலைமொழி வினைச்சொல்லா யிருக்கலாம். வினைச்சொல், வினைமுற்று என்றும் வினையெச்சம் என்றும் பெயரெச்சம் என்றும் மூன்று வகைப்படுவதை முன்னரே கற்றிருக்கின்றீர்.

நிலைமொழி, வந்தான் இராமன், இருண்டன திசைகள், வா இராமா, என்பனபோல், வினைமுற்றாயிருக்குமாயின் அத்தொடர் வினைமுற்றுத்தொடர் ஆகும்.

நிலைமொழி, ஓடி வந்தான். சென்று பார்த்தான், காண்பான் நின்றேன், என்பனபோல் வினையெச்சமாயிருக்குமாயின், அத்தொடர் வினையெச்சத்தொடர் ஆகும்.

நிலைமொழி, பெய்த மழை, உண்ட சோறு, ஓடிய குதிரை, காணுதகண், என்பனபோன்று பெயரெச்சமாயிருக்குமாயின், அத்தொடர் பெயரெச்சத்தொடர் ஆகும்.

எனின், தொகாநிலைத்தொடர்களில் நிலைமொழி வினைச்சொல்லா யிருக்குமானால், அத்தொடர் வினைமுற்றுத் தொடராகவாவது, வினையெச்சத் தொடராகவாவது பெயரெச்சத்தொடராகவாவது இருக்கலாம்.

இனி நிலைமொழி இடைச்சொல்லாக இருக்குமாயின் (இடைச்சொல் இன்னதென்பதையும் அதன் இலக்கணத்தையும் முன் சிறிது கற்றிருக்கின்றீர்) அத்தொடர் இடைச்சொற்றொடர் எனப்படும். உதாரணம்:—மற்று ஒன்று. யாதுகோல் பெயர்.

உரிச்சொல்லைப்பற்றி இப்பாடங்களில் இதுவரையில் ஒன்றும் சொன்னதில்லை. நனி தவ என்பன போன்ற சில உரிச்சொற்கள் தமிழில் இருக்கின்றன. இவைகளில் ஒன்று, நனி சிறினன், என்பதுபோல் நிலைமொழியா யிருக்குமாயின், அத்தொடர் உரிச்சொற்றொடர், ஆகும்.

பாம்பு பாம்பு; ஓடு ஓடு, குழந்தை குழந்தை, என்பனபோல் விரைவுபற்றி ஒரு வார்த்தையை இரண்டு தரம் அடுக்கிச் சொல்வதுண்டு. அப்படி அடுக்கி வருமாயின் அத்தொடர் அடுக்குத் தொடர் ஆகும்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

4-ம் பத்து 9-ம் தசகம்

[296-வது பக்கத் தொடர்ச்சி]

9-ம் பாசுரம்.

கூட்டுதிநின் குரைகழல்க
ளிமையோருந் தொழாவகைசெய்
தாட்டுதிநீ யரவணையாய்
யடியேனு மதுவறிவன்
வேட்கையெல்லாம் விடுத்தென்னை
யுன்திருவடியே சுமந்துழலக்
கூட்டரிய திருவடிக்கட்
கூட்டினைநான் கண்டேனே.

உரை:—அரவணையாய் - ஆதிசேஷன்மேல் துயில்பவனே, நின்-உன்னுடைய, குரைகழல்கள்-ஆபரணங்களணிந்ததினால் ஒலிக்கும் பாதாரவிந்தங்களை, இமையோரும் தொழாவகை செய்து-தேவர்களையும் கூடத் தொழாவகை செய்து (அவர் தர்ப்பராயிருந்தால் உன்னையணுகவொட்டாதபடி) ஆட்டுதி-அலையவைப்பாய். (இதற்குஎதிர்முகமாக, எத்தனை தாழ்ந்தவரேனும் உன்னிடத்தில் உபாயநுஷ்டானம் செய்பவரைஉன் திருவடிகளில் சேர்த்துக்கொள்வாயென்று பிரத்தியேகமாய் எடுத்துச்சொல்லவேண்டியது அவசியமில்லை.) அடியேனும் அது அறிவன்—(ஆழ்வாரே, நீர் இதை எப்படி யறிந்தபடியென்றால், வேட்கை எல்லாம் விடுத்து-உலகத்தாரது இயற்கைபோல் இல்லாமல் எல்லா உலக இன்பத்திலும் வைராக்கியத்தை எற்படுத்திக் கைவலிய ஆநந்தத்திலும் வேட்கையை விடுவித்தானென்று அடுத்த பாசுரத்தில் எடுத்துரைக்கிறார்), என்னை - நிகிர்ஷ்டனான அடியேனையுங்கூட, உன் திருவடியே சுமந்து உழல - உன்னுடைய ஸ்ரீ பாதங்களையே ஸதாஸர்வகாலமும் பணிந்து தியாநித்து என் உலக வாழ்க்கையைக் கழிக்க, கூட்டரிய திருவடிக்கண்-வெகு துர்லபமான மகிமை பொருந்திய உன் திருப்பாதங்களை, கூட்டினை - கொடிய உலகியற்கையுடைவில் அதனால் தட்டுமுட்டுப் படாதே உனது கிருபையால் எனக்குக் கூட்டிக் கொடுத்தாய், நான் கண்டேனே - அல்பனான என் விஷயத்திலே நீ காட்டிக் கொடுக்க நான் பிரத்தியக்ஷமாய் அநுபவித்தேன்.

விசேஷக் குறிப்பு I:—பகவானுடன் கலவை ஏற்படாத விரஹ துக்கத்துடன் உலகத்தின் அயோக்கிய ஸஹவாஸமும் சேர்ந்துகொண்டு துயரப்படுத்த ஆழ்வார் மனக்கிலேசப்படுகையில் பகவான் இவர் துக்கமெல்லாம்போகும்படி பரமபதத்தில்தன்னிருப்பைப் பிரகாசப் படுத்தியருளினான். எத்தனை தணிந்தவரேனும் ஆச்ரிதரை உன்திருவடிகளில் கூட்டும் சுபாவமுள்ள நீ யுன் திருவடிகளைப் பிரகாசிப்பிக்கக் கண்டேனென்று ஆழ்வார் திருப்தரானார்.

II. அல்லது, இப்போது உன் திருவடிகளைக் காட்டினாயென்று நான் திருப்தியடையவில்லை. உலகத்திலுள்ள பிராகிருத விஷயங்களில் என்னுடைய மனம் செல்லாமல் உன் சரணாரவிந்தங்களிலேயேபட்டு நான் ரஸமனுபவித்துக் கிடக்கும்படி வெகு ஹீனனான என் விஷயத்தில் செய்தருளிக்காட்டினாய். இப்படி, பரமதயை உள்ள நீ மற்றுமுள்ள இவ்வுலகலௌகிகர்களிடத்தும் கருணைகூர்ந்து அவர்களையும் நல்வழிக்குய்த்து என்னைப்போலேயே உன் திருப்பாதங்களை ரஸமாய் அநுபவிக்கும்படி செய்யலாகாதோவென்று பகவானுக்கு விநயபூர்வமாய் விண்ணப்பம் செய்கிறாரென்று பாட்டுக்குத் தாத்பரியம் கூறினும் ஒருவாறு பொருந்தும்.

III. இப்படித் தாத்பரியம் கொள்ளாத பக்ஷத்தில் அடுத்த 10-ம் திருவாய்மொழியாகிய 4-ம் பத்து 10-ம் தசகத்தில் இம்மஹானுபாவன் உலகத்தாரைக் குறித்து, பகவான் ஸர்வசுலபன், பரமகாருணிகனென்று எடுத்துக்காட்டி ஹிதோபதேசம் செய்து அவனையே ஆஸ்ரியுங்கோளென்று அருளிச்செய்ய என்ன காரணமென்ற கேள்வி பிறக்கும். இக்கேள்விக்குச் சமாதானமாகவேமுன்னைய குறிப்புக்களெழுதப்பட்டன. ஆயினும் ஆறாயிரப்படி உரைகாரர் அந்தத் திரு

வாய்மொழி முதல் பாசுரஉரையில் எழுதியுள்ள அவதாரிகையைப் பெயர்த்துத் தருதல் நலம்:—

தன்னைஇந்தக்கொடியவுலகத்தினின்றும்வாங்கியருள வேணுமென்று அபேக்ஷிக்கச் செய்தேயும் அவன் செய்தருளாமையாலே இனி உலகத்தாரோடு உள்ள ஸஹவாசம் விடத்தக்கதல்லவென்று ஏற்பட இவ்வுலகத்தாரை வைஷ்ணவர்களாக்கிக்கொண்டாகிலும் இவர்களோடு கூட வர்த்திப்போம் என்று பார்த்து எம்பெருமானுடைய ஸர்வேசுவரத்துவ ஸௌலபாதிகளை உரைத்து அவனை யாசிரியுங்கோள் என்று அவர்களுக்குஅருளிச்செய்கிறார். அல்லது எம்பெருமானைக் கண்டு அவனுடன் கலப்பு ஏற்பட்டிருந்தால் அக் கலவையினால் தனக்கு வந்த பிரீதி அதிசயத்தாலும் எம்பெருமானை இழந்துகிடக்கிற ஆத்மாக்கள் பக்கலுள்ள கிருபையாலும் எம்பெருமானை ஆசிரியுங்கோள் என்று அவர்களைக் குறித்து அருளிச்செய்கிறாரென்றாவது கொள்ளல் வேண்டும்"

10-ம் பாசுரம்.

கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலு மைங்கருவி
கண்டவின்பம் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்ப
மொண்டொடியா டிருமகளு நீயுமே நிலாநிற்பக் [யே
கண்டசதிர் கண்டொழிந்தே னடைந்தே னுன்திருவடி

அவதாரிகை:-ஐம்புலன் நுகர்ச்சியிலும் உலகவிஷய சுகத்திலும் மோக்ஷத்தைக் காட்டிலும் வெகு தாழ்ந்த கைவல்லியம் என்று முன் பல விடங்களில் விவரித்துள்ள அல்ப பிரயோஜனத்திலும் தமக்கு ஏன் வைராக்கியம் ஏற்பட்டதென்பதற்கு இப்பாசுரத்தில் காரணம் கூறுகின்றார். இக் கைவல்லியானுபவத்தைப்பற்றி 1-ம் பத்து 7-ம் தசகம் 1-ம் பாசுரத்திலும், 4-ம் பத்து 1-ம் தசகம் 10 பாசுரத்திலும் யாம் வரைந்திருக்கின்ற உரைகளில், விவரம் கண்டு கொள்க.

குறிப்பு:—இப்பாசுரம் திருக்குறள் காமத்துப்பால் 3-ம் அத்தியாயம் 1-ம் குறளை ஒத்திருப்பதைக் கவனிக்கவேண்டும். திருக்குறள் நம்மாழ்வார் காலத்துக்கு மிகப் பின்னர் உண்டானதென்பதற்குத் தொன்றுதொட்டு உலாவிவரும் பண்டைய காலத்து வெண்பாவால் விளங்கும். சொல் தொடர்பிலும் விசேஷண விசேஷியங்களிலும் அடைவு மொழிகளிலும் ஒன்றோடொன்று ஒரேமாதிரி இணங்கியிருப்பதால் அடியில் கண்ட வெண்பா அறுதி யிடுவது போலத் "திருக்குறள் வாய்மொழியின் சேய்" என்று கூறுதற்கு இடமுண்டு. மேலும் இங்கு ஆழ்வார் தாம் பகவானது திருவடிசேரப்புகுகின்ற சந்தர்ப்பத்தில் மற்றவர் வாக்கை பிரயோகித்து விண்ணப்பம் செய்வாரென்று அநுமானிக்க இடமில்லை.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள."

[களவியல் 3-ம் அத்தியாயம் புணர்ச்சி மகிழ்தல்- பொருள் - கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறியும் ஐம்புலன் நுகர்ச்சியும் ஒள்ளிய தொடியை உடையாள் கண்ணே உள.]

உரை:—கண்டு - கண்களால் கண்டு, கேட்டு - காதால் கேட்டு, உற்று - மெய்யால் தீண்டி, மோந்து - மூக்கினால் முகர்ந்து, உண்டு - வாயாலும் நாக்கினாலும் ரஸித்து, உழலும் ஐங்கருவி - இவ்வண்ணம் எத்தனை காலம் மேற்கண்ட ஐந்து கருவிகளால் அநுபவித்தாலும் திருப்திவாராமல் திரும்பியும் இக் கருவிகள் முன் அநுபவித்ததையே நாடித் திரியும்படி, கண்ட இன்பம் - பஞ்சேந்திரியங்களாலடையும்நுகர்ச்சியும் (அதாவது லோகவிஷய சுகம்,) தெரிவரிய- தபஸு செய்வாருக்கு வெகுகாலம் சென்ற பிறகுங் கூட அறிய வொண்ணாத, சிற்றின்பம் - மோக்ஷ ஆநந்தத்தை அபேக்ஷித்து அதற்குஎவ்வளவோ தாழ்ந்த கைவல்லியமாகிற பரிசுத்த ஆத்மவிளக்கம்தோன்றுகின்ற சில்லரைசுகம் ஆகிய இந்தச் சுகங்களெல்லாவற்றையும், ஒழித்தேன் - தீர விட்டுவிட்டேன். எப்படியெனில், ஒண் - அழகிய, தொடியாள் - கைகளில் அணிந்த வளைகளையுடைய மஹாலெட்சுமிதேவி - (இலக்குமியை எடுத்தது மற்ற மஹிஷிகளுக்கும் உபலக்ஷணம்) நீயுமே-நீயாகிய பரம புருஷனே, [ஏ தேற்றப்பொருளில் வந்துளது. மற்ற ஸாதாரண ஸம்ஸாரிகளை ஒழித்து, பகவானுக்கு ஏற்ப, திவ்விய மஹிஷிகளும் அவனுக்குப் பரிசரியத்தில் ஈடுபட்டு அதிலேயே யூன்றி ஆநந்தமடையும் சேஷன் கருடன் விஷ்வக்ஸேநர் முதலான நித்தியர்களைமாத்திரம் குறித்துச் சொல்கிறது] நிலாநிற்ப - மற்ற ஏனையோர் கலவாதே இவர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து ரஸிப்பதை, கண்ட - எனக்குக் காட்டிக்கொடுத்த, சதிர்-காரியங்களை முடிக்கும் வல்லமையுடைய, [அதாவது, இங்குப் பகவானது சாதுரியத்தை வியந்து கூறியபடி] உன் திருவடியை அடைந்தேன்-உன் பாதாரவிந்தங்களை உலக விஷய சுகங்கள் கைவல்லியம் உலகர் சாதாரணமாய் அளிக்கும் அல்பமாகிய இதரபோகங்களை யெல்லாம் விட்டு இந்த உலகியற்கையின் ஸஹவாஸத்தால் வந்த சர்வதுக்கங்களையும் தவிர்த்துக்கொண்டு நான் பெரும்பேறாக அடைந்தேன். "விஷய ரஸங்களிலும் கைவல்லியானுபவ ரஸத்திலும் வைராக்கியம் பிறந்தது எதனாலே யெனில், நித்திய நிர்த்தோஷ கல்யாண குணங்களாலேயே நிறைந்து உனக்குஉசிதமான சேர்த்தியாயமைந்தஇலக்குமியாதி திவ்விய மஹிஷிகளும் சுபாவத்திலேயே சம்சாரமாகின்ற துக்கத்திலிருந்து, நிரந்தரமாய் நீக்கப்பட்டுஉனக்குப் பணிவிடை செய்வதிலேயே ஊன்றிக் களிக்கும் சேஷசேஷாசன அசங்கேயரான திவ்விய பரிஜநங்களும் நீயுமேயா யிருந்த இந்த மனோஹரமான விருப்பைக் கண்டு அந்த ஐசுவரிய கேவலானுபவத்தை யொழித்து உலக போகங்களிலேயே ஈடுபடும் ஜனங்களை விட்டு இவர்கள் நடவடிக்கைகளைப் பார்த்துப் பட்ட துக்கமெல்லாம் போகும்படி உன் திருவடிகளை யடைந்தேன்" என்கிறார் ஆறாயிரப்படி.

11-ம் பாசுரம்.

திருவடியை நாரணனைக் கேசவனைப் பரஞ்சுடரைத்
திருவடிசேர்வதுகருதிச்செழுங்குருகூர்ச்சடகோபன்
திருவடிமே லுரைத்ததமி ழாயிரத்து ளிப்பத்துந்
திருவடியே யடைவிக்கும் திருவடி சேர்ந்தொன்றுமினே.

பதக்குறிப்புக்கள்:-திருவடியை-ஸ்ரீமானான ஸ்வாமியை, திருவடி மேலுரைத்த-பகவானது குணாதிசயங்களைப்பற்றிப் பேசிய; ஒன்றுமின் - பகவானுடன் ஒன்றாகும்படி நேருங்கோள்; புகலிடம் வேண்டுமேயென்றால் பகவானது பாதாரவிந்தங்களில் பின்புறம் ரேகைகள்போல் அவற்றோடு பிரிக்கவொண்ணாதபடி ஒன்று சேருங்கோள்.

பொழிப்புரை:—"எம்பெருமானைக் கண்ட பிரீதியதிசயத்தாலேயவனை யேத்தினவித் திருவாய்மொழி வல்லாரை இத்திருவாய்மொழி தானே எம்பெருமான் திருவடிகளை யடைவிக்கும்; அத்திருவடிகளிலே திவ்வியரேகைபோல் போய்ச்சேருங்கோளென்கிறார்"

விசேஷக் குறிப்பு I:—பகவானது திருவடியைச் சேருவதற்கும் அவற்றை விட்டு விலகாமலிருப்பதற்கும் இத்திருவாய்மொழியைக் கற்பது ஒரு சூழ்ச்சி என்பது ஆழ்வாரது திருவுள்ளம்.

II. இத்தசகத்தை ஸங்கிரஹிக்கையில் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் திருமிடோபநிஷத்து ஸாராவளியில், ஆத்மாக்களை இவ்வண்டத்தில் அவர்கள் பாவங்களுக்கேற்பப் பிறப்பு எடுக்கச் செய்து ஜராமரணாதி துக்கங்களுக்குட்படுத்தி வதைப்பதால் இவ்வண்டமே காராகிரஹமாகிற கோட்டை என்கிறார். அண்டத்தினின்றும் வைகுண்டம் போவது கோடி ஆத்மாக்களில் சிலருக்குக்கூடத் துர்லபமென்பது திருவுள்ளம்.

தேவகி

[289-வது பக்கத் தொடர்ச்சி]

அத்தியாயம் 10

மறுநாட் பிற்பகல் நான் சித்தூர் புகைவண்டி நிலயம் வந்து சேர்ந்தேன். நான் சித்தூருக்குப் புறப்படும் தினத்தைக் குறித்து நான் எழுதவில்லை யாதலால் என்னை யழைத்துச்செல்ல யாரும் புகைவண்டி நிலயத்திற்கு வரவில்லை. நிலயத்திற் கருகில் இருந்த வண்டியொன்றைஅமர்த்திக்கொண்டுஜமீன் தார்மனைக்குப் போய்ச்சேர்ந்தேன். அப்பொழுது தோட்டத்தில் மிகவும் அழகாக விளையாடிக்கொண்டிருந்த என் மாணவிஇராணியம்மாள்ஓடோடிவந்துஎன்மீதுதாவினாள். தாவின வென் காதற்சிறுமியை தாயினும் உவந்தேற்று அவளுடன் உள் நுழைந்தேன். ஒரு சிறை அமர்ந்திருந்த அன்னையார் கருணை தவழ்ந்த முகத்துடன் என்னை வாவென்று வரவேற்றார். இவ்வரவேற்பின் அருமையினை நான் எந்நாளும் மறக்கமாட்டேன். என் மாமி இறந்தபடியால் திரும்புவதற்குக் காலந் தாழ்ந்ததுபற்றி அன்னையாரிடம் கூறினேன். பிறகு அற்றைப்பொழுது வழிவந்த சிரமத்தைத் தீர்த்துக்கொள்வதில் கழித்தேன். பிறகு இராணிக்கு ஓதுவிப்பதிலும், ஒழிந்த வேளையில் படிப்பதுமாய்க் காலத்தைப் போக்கிவந்தேன்.

வருடம் ஒன்றும் கழிந்தது. நானும் அல்லல் ஒன்றுமில்லாது இனிதே அம்மனையில்வதிந்து வந்தேன். இப்படி நான் வதிந்துவருகையில், இம்மனையுடைத் தலைவர் என்னை யாட்கொண்டுவிட்ட ஜயரங்க பூபதியார் மறுமணங்கொள்ளப்போவதாக ஒரு பேச்சு மாளிகையில் கிளம்பியது. இவ்வதந்தி நாளாக நாளாக வளரலாயிற்று. ஒருநாள் பிற்பகல் அன்னையார் என்னறைபோந்தார். போந்தவர் தமது குடும்ப நிகழ்ச்சிகளை யெல்லாம் என்னிடம் கூறிவருந்தினார். "உத்தமி என் மருகி இறந்து நான்குவருடங்களாகின்றன. அவளுடன் என்குடும்பத்தின் நலமெல்லாம் அகன்றது. என்மகனும் அதுமுதல் பித்தன்போலானான். யாருடனும் பேசுவதில்லை. சந்தோஷமென்பதற்றவனாய் வாழ்கின்றான். மறுமணங் கொள்ளவும் இதுவரை மறுத்துவந்தான். நானோ வயது சென்றவள். நான் இறக்குமுன் அவன் ஒரு மனைவியையும் என் இராணி யொரு அன்னையையும் பெறக் காண விழைகின்றேன். திருமகள்போல் நீ என் மனை வந்தாய். நீ இங்குக்கால்வைத்த நேரம் என் குடும்பத்திற்கு நல்லா நலமும் தருவதானது. அவனும்இப்பொழுது, மணஞ்செய்ய இசைந்துள்ளான். பெண்ணே, இம்மனையினில்நீ என் பெண்ணேபோல் இனிதிருப்பாய். என் மகன்மணத்தோடு உன் மணமும் கண்ட பின்னர் நான் இறப்பேனேல் எனக்குக் குறையொன்றுமிராது" என்று அன்னையார் கூறினார்.

என் அண்ணலார் மணத்தைப்பற்றி யின்னும் சிறிதுவிவரம் அறிய விழைந்தது என் மனம். அன்னையை நோக்கி,"பெண் நிச்சயம் ஆகிவிட்டதா" என்று கேட்டேன். "பெண்களுக்கென்ன குறை. வாயைத்திறந்தால் நூறுபெண். இங்கிருந்து இருபது மைலுக்கப்பால் வாங்கூர் என்னும் சிறு வூர் ஒன்றுளது. அங்கு ஒரு பெருங் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஒருவர் இருக்கின்றார். இப்பொழுது அவர்கள் சிறிது ஏழ்மையுற்றிருக்கின்றனர்; எனினும் குலச்சிறப்புடையவர். செல்வாக்கு முடையவர். ஜில்லா போர்ட் தலைமை முதலிய பதவிகளைக் கடந்தஆறுண்டுகளாக ஏகபோகமாய் அனுபவித்து வருகின்றார். அவருக்குச் சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற ஒருமகனும், ஒரு பெண்ணும் இருக்கின்றார். பெண் சிவந்த நிறம், ஒற்றைநாடி, களையுடைய முகம், ஆங்கிலம் கற்றிருக்கின்றாள். சமீபத்தில் சென்னையில் நடந்த மாதர் மஹாநாட்டில் அப்பெண் செய்த பிரசங்கம் பத்திரிகைகளால் கொண்டாடப்பெற்றதாம். இவைகளை யெல்லாம் நான் சிறிதும் விரும்புவதில்லை யெனினும் நம் மனைவந்தால் எல்லாம் பின் சீராய்விடும். அவளது தந்தையார் பெண்ணைக்கொடுக்க விருப்பமுள்ளவரா யிருக்கின்றார். என் மகனுக்கு அப்பெண் இசைந்தவளாயின் கலியாணம் நடந்துவிடும்." என்று அன்னையார் கூறினார்.

அவரது பேச்சின் ஆர்வம் என் மருமத்தில் அம்பெனப் பாய்ந்தது. எனினும் என் முகமுற்ற மாறுதலைத் திருத்திக்கொண்டு, "நீங்கள் ஒரு மருகியையும், நம் இராணி யொரு தாயையும் பெறுவது யாருக்குத்தான் மகிழ்ச்சியைத் தராது. உங்கள் திருமகனார் பெண்ணைப் பார்த்துளாரோ" என்று கேட்டேன்.

"நீண்ட நாட்களாகத்தான் போய்ப் பார்த்துவருவதாகச் சொல்லிக்கொண்டேயிருகின்றானேயல்லாமல் அவன் அங்குப் போவதாகக் காணோம். அவன் நல்லவனேயானாலும், விநோதமான இயற்கையுடையவன். பெண்ணகத்தாரை ஒருநாள் இங்குவந்து விருந்துண்டுபோமாறு அழைத்தேன். அவர்களும் சம்மதித்துளார். நாளைவாரம் நம் இராணியின் பிறந்தநாள் வருகின்றது. அதையொட்டிப் 'பெண்வீட்டார் பெண்ணுடன் இங்குவருவர். நீயும் உன் சகோதரியைக் காணலாம். நீங்களிருவரும் உடன்பிறந்தார்போல் இனிதுவாழக் கடவுள் கருணைபுரியவேண்டும்" என்று

அன்னையார் மணத்தையும் முடித்து எம்மையும் இணைத்துவிட்டார். பிறகு வேறுபல விடயங்களைப் பற்றி வழக்கம்போல் வார்த்தையாடிவிட்டு அவர் அகன்றார்.

அன்னையார் ஓதிய இம் மணவோலை என் உள்ளக் கிளர்ச்சியை யெல்லாம் கொன்றழித்தது. எனக்கும் என் மனம் முன்னரே வரித்துவிட்ட என்னுடைக் கொற்றவனுக்குமிடையே அயலொருத்தி புகவிருப்பதைக் கேட்கவோ கடவுள் எனக்குக் காதளித்தான்; அவளைக் காணவோ கண்கள்பெற்றேன்; என்று நான் மனம் புழுங்கினேன். கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போமென்னும் பழமொழி என்மாட்டு மெய்யாகத்தான் பிறந்ததோ என்று வெந்து உதிர்ந்தேன். இங்குநான் ஏன் வந்தேன் என்று என்னையேநொந்துகொண்டேன். எனினும் என் னுள்ளக் குழப்பத்தினிடை நம்பிக்கையொன்று மின்னலெனத் தோன்றித் தோன்றி மறைந்துகொண்டிருந்தது. இடக்கண்ணும் இடத்தோளும் அடிக்கடி துடிக்கலாயின. இவ்விந்தைதான் எனக்கு விளங்கவில்லை. 'ஆவது ஆருக' என்று ஈசனிடம் என்வாழ்வின் கதியை ஒப்புவித்துக் காலத்தை யோட்டிவந்தேன்.

இராணியின் பிறந்தநாள் விழாவிற்கான முயற்சிகள் இனிதுநடைபெற்றன. மாளிகைமுழுதும் அலங்கரிக்கப் பெற்றது. எங்கும் தோரணங்கள் கட்டப்பெற்றன. ஜமீன்தாருக்குப் பெண்கொடுக்க இருக்கின்ற வாங்கூர் தனவந்தர் தம்மனைவிமக்களுடன்வரப்போகின்றார் என்னும் பேச்சு மாளிகையில் எங்கெங்கும் ஒலித்தது. ஜமீன்தாருக்குக் கலியாணம் நடந்தால் தமக்குக்கிடைக்கும் புதுஆடைகள்சேலைகளில்மனம் வைத்தவேலையாளர் மிக மகிழ்ந்தவர்களாயிருந்தனர். பிறந்தநாளும் வந்தது. வாத்திய ஒலிகளெங்குமெழுந்தன. விடியற்காலையிலிருந்தே விருந்தினர்கள் வந்து குழுமினர். எங்கும் களிப்பின் கிளர்ச்சி திகழ்ந்தது. நானொருத்தியே தனிமையின் தனியிடமாய் என்னறையில் தனியிருந்தேன்.

அன்னையார் மணங்கூட்டிவைக்கும் முறை எனக்குமிகப் புதுமையாயிருந்தது. மணமகனும் அவரைச் சேர்ந்தாரும் பெண்ணைப் பார்ப்பதற்கு அவள் வசிக்கின்ற இடத்திற்குச் செல்வதே வழக்கமென்று இதுவரை நான் எண்ணியிருந்தேன். ஆனால் பெண்ணே மணமகனைக் காணவரும் இப்புதுவழக்கம் இவ்வடநாட்டுத் தனவந்தர்க்கு ஏற்றதொரு முறையோ நானறியேன். வேசையர் முறையே இதனில் நாறக் காணும் நான் வியக்காது என் செய்வது! ஜயரங்க பூபதியும் இதை ஒவ்வித்தா ரிருக்கின்றாரோ, அல்லது கடடந்தான் நடிக்கின்றாரோ என்று சிலபோது அயிர்த்தேன். இது பணத்தின் மகிமையோ அல்லது பெண்ணகத்தார் சிறுமையின் மாட்சிதானோ? உண்பதும் நாழி, உடுப்பதும் நான்கு முழம்; வாழ்வதோ நிலையில்லை. நிலையிலா இவ்வாழ்வினில் பகட்டும் பொன்னை நச்சி மாந்தர் இழிகின்ற இழிவினை ஏ கடவுளே உன்பிரளயத்தால் கழுவாயோ என்று வாய்விட்டுக்கூவினேன்.

கதிரவனும் தன் இளங்கதிரை உலோபமின்றி யருளினான். வண்டிகள் பல மாளிகைக்கு வந்துசேர்ந்தன. எங்கும் ஓட்டமும் நடையும், கும்பலும், கூச்சலும், வாத்திய கோஷமும் நிறைந்தன. களிப்பின் பெருமிதமே எங்கெங்கும் சூழ்ந்து பொலிய நானோ தன்பத்தின் தனியிடமாய் என்னறையினுட் அமர்ந்திருந்தேன். ஓடினவண்டி யெல்லாம் என் தலையிலே சுழன்றன. மண்மிதித்து நடப்பவரடியெலாம் என் நெஞ்சிலே பதிந்தன. விரைகின்ற பரிமாவின் குளம்படிகள் என் னடிவயிற்றில் அழுந்தின. இந்நிலையில் வாத்தியங்கள் வன்மையுடன் முழங்கின. பலர் கூட்டங்கூட்டமாய் வீதியைநோக்கி நடந்தனர். பெண்ணகத்தாரை வரவேற்பதற்காகச் செல்கின்றனர் என்று எண்ணினேன். பெண்ணகத்தாரும், மணப்பெண்ணும் வந்துவிட்டனர்; மணமும் நடந்துவிடும். இனி நான் வேறிடம் தேடவேண்டும் எனத் துணிந்தேன். அல்லது, நீரோ, நெருப்போ, கயிறோ, கடுவோ, கத்தியோ.........சீ! சீ! இதுவென்ன பேதைமை!

இன்னபடி நான் எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் அன்னையார் மலர்ந்த முகத்துடன் விரைந்து என்பால் வந்து, "தேவகி, அவர்களும் வந்தனர். இந்தா இச் சரிகைச் சேலையை அணிந்துகொள். இக் கலன்களைப் பூட்டிக்கொள். உன் இராணியின் பிறந்தநாள் இத்தினம் என்பதை மறந்தனையோ. இராணியை அணிகலன் பூட்டிக் கோலம்செய்வது உன் வேலையன்றோ. சீக்கிரம் வா" என்று கூறி யகன்றனர். மனம் செத்துக்கிடக்கும் நான் என் கையின் துணைகொண்டு சேலையையும் அன்னையார் தந்த கலன்களையும் அணிந்துகொண்டு இராணியை அலங்கரிக்கும் பணியை மேற்கொண்டேன். என் மாணவியும் அழகிய பதுமைபோல் அலங்கரிக்கப்பெற்றாள்.

முகூர்த்தவேளை வந்ததெனப் புரோகிதர் பறந்தனர். அவள் பூண்ட அணிகலன்கள் வீசுகின்ற ஒளித்திரள் புடைசூழச் சிலம்பொலிசூழுஞ் சிற்றடி பெயர்த்து அவளுக்கென்று அமைத்திருந்த பொன்மணை மீது அமர்ந்தனள். அந்தணர் ஆசி கூறி அக்ஷதை தூவினர். என் கொற்றவன் ஜயரங்க பூபதியார் இராணியின் அருகில் வந்து அமர்ந்திருந்தார். மணமகளைக் காணவிருக்கும் மணமகன் பூணுகின்ற பகட்டுடையொன்று மிலாமல் அவர் தமது வழக்கமான உடையோடிருந்தது எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. பெண்ணகத்தாரைச் சேர்ந்த ஆடவர் ஒரு சிறை வீற்றிருந்தனர். அவர்களுக்கிடையில் சரிந்த தொந்தியுடன் வீற்றிருந்த ஒரு கனவானது உருவத்தால்அவர்தான் பெண்ணின் தகப்பனார் என்றுஅறிந்தேன். ஓர் சிறை விரிக்கப்பெற்ற இரத்தினகம்பளத்தில் மடவார் உட்கார்ந்திருந்தனர். புதுவுடையும்மின்னுகின்றமணிகளும், கோணல் பின்னலும் தருகின்ற தோற்றமுடன் சோபையில்லா வொருபெண் அவர்களிடைத் தோன்றினள். அவள்வாய் சிறிது அகன்றிருந்தது. அவளது சப்பை மூக்கும் மந்தக்கண்ணும் கொழுப்பொம்மையை எனக்குநினைவூட்டின. வற்றிய மேனியும் இரத்தமில்லா வெண்மை நிறமும், குச்சிக்கையும்கண்டு உயர்தரக் கல்விகற்று விடுதலை பெற்ற வோர் பெண் இவள் என்பது அறிந்தேன். அவளது பொதுத்தோற்றத்தில் பணச்செருக்கும் கல்வித் தருக்கும் துலங்கின. சரிகையினால் அலங்கரிக்கப்பெற்ற அவள் கைக்குட்டை முகத்திற்கும் மடிக்குமாக ஓயாமல் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. இத்தகைய நலத்தகையாள் என் கொற்றவனை வாழ்விக்க வந்தவள் என்பது தெரிதல் எளிதே. உயர்தரக்கல்வியால் தான்உற்ற நாகரிகத்தையும் சுதந்தரத்தையும் தெரியக்காட்டி அப் பெண்மணி இருந்தவிதம் இதுவாக, பிறந்தநாட் சடங்கோ

செவ்வனே நடைபெற்றது. அந்தணர் பலர் வேதகோஷம் செய்துகொண்டிருந்தனர். வந்தவர்க்கெல்லாம் உலோபம் சிறிதுமில்லாது பூரிவழங்கப்பெற்றது. நல்லோர் தரு ஆசியுடன் பிறந்தநாட் சடங்கு இனிது நிறைவெய்தியது. வந்த விருந்தினர்களிற்பலர் இராணிக்கு ஆடையும் அணிகலனும் வழங்கினர். பின்னர் விருந்து நடந்தது.

உண்டி முடிந்த சிறிதுநேரத்திற்கெல்லாம் பூபதியார் வேலையுளதென்று சொல்லி வெளிச்சென்றார் என்று கேள்வியுற்றேன். மாலை அவர் திரும்புவார் என்றும் சொல்லிக்கொண்டனர். விருந்தினர் மனையிருக்க அவர் ஏதோ வேலையுளதென்று வெளிச்செல்வது யாருக்குத்தான் வியப்பைவிளைக்காது. ஜயரங்கர் நூதன மனிதராகவே காணப்பெற்றார். இம்மனையினில் நிகழ்வனவெல்லாம் என் சிற்றறிவிற் கெட்டவில்லை. இன்னும் என்னவென்ன புதுமை நிகழ்ச்சிகள் நிகழுமோ என்று எண்ணினேன்.

உண்டிக்குப் பின் சங்கீதக் கச்சேரி ஒருபுறமும், நடனம் ஒருபுறமும் நடந்தன. மணி மூன்றிருக்கும். அவ்வேளை மாளிகை வாயிலில் ஒரு கூச்சல் ஏற்பட்டது. அக்கூச்சல் என்னைக் கவர என்னறைச் சாளரத்தின்வழியே நோக்கினேன். காவியாடை தரித்திருந்தவொரு பெரியவர் ஒருகையில்ஊன்றுகோலும் மறுகையில் கமண்டலமும்பற்றினராய் மாளிகையை நோக்கி நடந்தார். அவரைச்சுற்றி ஐந்தாறு வேலையாளர் தடுத்தவண்ணம் தொடர்ந்தனர். அவர்மாளிகையையும் நெருங்கினார். இதுவரை அவரதுமெய் தீண்டக் கூசிய ஆட்கள் அவரைப்பற்றி நிறுத்தினர். உடனே நானும் வெளியே வந்து நிகழ்வனவற்றைக் கவனித்துக்கொண்டிருந்தேன்.

கனவு

அன்று மத்தியானம் நான் மழையின் மகிமையைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தேன். மழையில்லையெனில் உலகமும் உலகத்திலுள்ள சகல ஜீவ சிருஷ்டிகளும் அழியும். பரம்பொருள் (கடவுள்) எத்தன்மைத்தாயினும், மழைபெய்விக்குங் காரணமொன்றினாலேயே, வேறுகாரணம் இல்லையெனினும் கருணாசாகரமூர்த்தியாயுளதென்பதை அறிந்துகொள்ள இயலுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். கருணையினாலல்லவோ கடவுள்மழையைச்சிருஷ்டிசெய்திருக்கின்றார்! இங்ஙனமேவெயிலும், வெப்பமும் அன்னதற்குரிய சூரியமண்டல காந்தமும், மற்ற மண்டலங்களும், கருணையினாலல்லவோ சிருஷ்டியின் அமைப்புக்குஅத்யாவசியமானவைகளென்று நினைக்கலாயின.

அன்றுமாலை நான் வெளியில் உலாவச் சென்றபோது திடீரென மழை வந்தது. மழை பெய்ய ஆரம்பமாயிற்று. பெருந் துளிகள் பொட்டுப் பொட்டென ஆகாயத்தினின்று விழுந்ததும் உலாவுவதை விட்டுத் தங்கிநிற்க விடந்தேடினேன். அருகிலொரு சாராயக்கடை கண்டு அதனுட் புகுந்தேன். சாராயங் குடிப்பதற்கன்று. மழைக்குத் தங்குவதற்கே.

அங்கே ஒருவருமில்லை. சாராயம் விற்பவன் மாத்திரம் தனியாக இருப்பது கண்டேன். ஒரு பஞ்சம வாலிபன். நெற்றியில் சிவப்புநாம மிட்டிருந்தான். நாமமிட்டுச் சாராயம் விற்கிறான்! அவனிடம் சம்பாஷிக்கலானேன்.

மழைக்காகவா வந்தீர்களென்று அவன் வினவியதற்கு ஆமென்றுரைக்க அவன் உபசார குணமுள்ளவனா யிருந்தமையால் உட்காரலாயினேன். சாராயங் குடிக்க நான் வரவில்லையென்பதைத் தெரிந்துகொண்டான்.

மழைத் துளிகள் பெருமழையாக மாறின. நாங்களிருவர் மாத்திரமே யிருந்தோம் அந்தச் சாராயக் கடையில்.

பேசத்துடங்க அவன் தன் சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொன்னான். அவன் பிறந்தது தென்னாப்பிரிக்காவில். அவன் தந்தையின் தேசம் இத்தென்னிந்தியாவே எனினும் அவன் தந்தை தென்னாப்பிரிக்காவில் போயுள்ள பல இந்தியர்களைப்போல, பிழைப்பின்பொருட்டுப்போயிருந்தகாலத்தில்அவன்(தான்) அங்கே பிறந்தவன். தன் குழந்தைப்பிராயமெல்லாம் அங்கே இருந்தவன். பின் அவன் தந்தை அங்கே இறந்துவிடத் தன்தாயும் தன்தம்பியும் தானும்-மூவரே அக்குடும்பத்தில்—இந்தியாவிற்கு வந்துவிட்டார்கள். பின் தாயும் இறந்துவிட, தானும் தம்பியுமேதம் பிழைப்பிற்கு வேலைதேடியதில் தனக்கு,சாராயம்விற்கும் வேலையே கிடைத்தது. தன் தம்பி சாயம் பூசும் வேலை பழகி வேலூரில் சாயவேலையிலமர்ந்தான். சமீபத்தில் அவன் தம்பியும் இறந்துவிட்டான், அவன் தம்பி இறப்பதற்குமுன் அவர்களிருவருமே. ஒருவர்க்கொருவர் துணையாகையால் அச்சாராயக்கடையிலிருந்துபோய் ஒரு மாதம் வரை அவன் தம்பியிடம் தங்கியிருந்து எத்தனையோ சிகிச்சைசெய்தும் அவன் தம்பி இறந்துவிட்டான். இறந்த கிரியைகளுக்குப் பின் அவன் அம் மழைபெய்த தினத்துக்கு முன் தினந்தான் சாராயக்கடைக்குத் திரும்பிவந்தான்.

அவன் தம்பி விஷயத்தைப்பற்றிப் பேசும்போது மிகவும் துக்கத்துடன் பேசினான். "இவ்வுலகத்தில் ஆதரவுக்கு அவன் ஒருவன்தான். அவனும் செத்துப்போய்விட்டதால் இப்போது உலகத்தில் தனித்துத்தானே இருக்கவேண்டியிருக்கிறதென்று" சொன்னான்.

அவன் பிழைப்பிற்காகச் சாராயக்கடையில் மனமொவ்வாது சாராயம் விற்கவமர்ந்திருந்தபோதிலும் அவன் சாராயம் முதலிய போதை வஸ்துக்களை எக்காலத்திலும் உபயோகித்ததில்லை.

அவன் தன் தம்பியின் மரணத்தைப்பற்றிப்பேசினவுடனே அதைச் சார்ந்த சில சம்பவங்களையும்விஸ்தரித்துப் பேச ஆரம்பித்தான்.

அவன் தம்பியை மயானத்திலிட்டுவிட்டு அன்று இராத்திரி வீட்டுத்திண்ணையில் படுத்துறங்கிக்கொண்டிருந்தான். நடுஜாமத்தில், அர்த்த இராத்திரி வேளையில், அவன் ஒரு கனவு கண்டான். அந்தக் கனவைப் பற்றிச்சொல்வதற்காக அவன் தம்பியின்குணத்தைச் சொன்னான். அவன் தம்பி நல்ல விஷ்ணுபக்தனென்றும் அநுதினமும் துளசிமாலை முதலியவைகளுடன் விஷ்ணுவைத் தோத்திரம் செய்பவனென்றும் அடிக்

கடி ஆலயங்களுக்குப் போய் கடவுள் வணக்கத்தை இடைவிடாது நடத்திவந்தானென்றும் சொல்லித் தான் கண்ட கனவைச் சொன்னார்.

ஸ்வாமி சங்கு சக்கரங்களுடன் கருடவாஹனத்தின்மீதுதோன்றினர். ஸ்வாமி அவ்விதம் தோன்றினவுடன் அவன் அவருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரமிட்டு முன்னின்று பக்தி பரவசமானவனாகிக் கை கூப்பி நின்றுகொண்டிருந்தான். திடீரெனக் கருட வாஹனம் கனவுருவு மாறி (கனம்—உருவு=கனவுருவு) ஒரு கைப்பிடி மண்ணாளவே ஆகிவிட்டதைக் கண்டான். அதைக் கண்டவுடன் அம்மண் திடீரென மாண்டுபோன அவன் தம்பியாகிய உருவுடன் மாறியது! ஸ்வாமியின் ஸ்வரூபம் மறைந்தது! அவன் தம்பியைப் பிரத்யக்ஷமாய்க் கண்டான். இது சத்யம் இது நிச்சயம். அவன் தம்பி கையில் துளசி மாலை இருந்தது. தேக சௌக்கியத்தைப் பற்றிக் கேட்க அவன் பூர்ண சௌக்கியத்துடனிருப்பதாகச் சொல்லித் தன் அண்ணனது கையைப் பிடித்து இதோ பார் என்று தன்னைச் சுட்டிக் காண்பித்துக்கொடுத்தான். அண்ணனாகிய தான் அவனை அதிக ஆவலுடன் தொடத் தொடங்குமளவில் கனவு முடிந்தது. சாராயக் கடையில் வேறு பிழைப்பிற்கு வழியில்லாமல் வெறுப்புடன் விருப்பமின்றி வேலைக்கமர்ந்திருந்த அண்ணன் அன்று துக்க பரவசனாகி மயானத்தைவிட்டு வந்தவன் வீட்டுத் திண்ணையில் உறங்கிக்கொண்டிருந்தவன்-கனவு கண்டவன்-கனவு முடியவும் விழித்துக் கொண்டான்.

விழித்து மிக்க வியப்புற்று ஸ்வாமியை நினைத்துத் தியானித்துக்கொண்டு கைகூப்பியவனாய் அவ் வர்த்தராத்திரியி லிருந்தான்.

இருந்த சமயத்து ஒரு பெரிய வெளிச்சம், காந்த வெளிச்சம், பிரசண்டமாருதம்மோதும்போது சமுத்திரத்தில் மரக்கலஞ் செலுத்தும் மாலுமிகளுக்குத் திசைகாட்டும் "லைட்ஹவுஸ்" கலங்கரைத்தீபத்தைப் போலச் சொல்லமுடியாத அரிய பெரிய வெளிச்சமொன்று திடீரென்று தோன்றியது. அவ்வெளிச்சம் தோன்றியக்ஷணமே மறைந்தது. அவன் திகிலுற்றுக் கண்திறந்து பார்க்கும்போது தூரத்திலிருந்த ஒரு மரத்தருகே மரத்திற்கு மேல் ஒரு காந்தவெளிச்சம் போல் ஒளிதோன்றிற்று. இவ்வொளி சுமார் ஒருநிமிஷம் வரைக்கும் தன் கண் வெளிச்சத்திற்குசெவ்வையாகத் தோன்றிற்று - என்றான்...அப்போது அவன் உறக்கத்திலில்லையாம். விழித்துக்கொண்டிருந்தானாம். அதைக் அவன் கண்டது விழித்துக்கொண்டிருந்த போதே.

தான் கண்டதை என்னவென்று நினைப்பதென்று கேட்டான். கனவென்பதென்ன? கனவின் காரணம் யாது? எவ்விதமிருக்கிறது? கனவிற்கும் வாழ்விற்கும் அறிவிற்கும் சம்பந்த முண்டா? என்ன? எவ்விதமென்று கேட்டான்.

அவன் நெற்றியில் நாமமணிந்திருந்தானென்று முன்பே கூறியுள்ளேன்.

அவன் சற்று விவேக உணர்ச்சியுள்ளவனென்று அறிந்துகொண்டு அவனைப் பரீக்ஷிப்பதற்காக நான் பின்வருமாறு சொன்னேன்:—

"மனுஷ வாழ்க்கையும் அறிவும், ஞானமும், உணர்ச்சியும், பஞ்சேந்திரிய சக்திகளும் மிகவும் அற்புதமானவை. மிகவும் ஆச்சரியத்தை உண்பண்ணத்தக்கவை. சாதாரணமாக நித்திரைச் சமயத்தில் ஸ்வப்பன முண்டாவதும்ஸ்வப்னங்களின் (கனவு)இயற்கைகளும் மிகவும் ஆராயத்தக்கவை. ஸ்வப்பனத்தில் பற்பல தோற்றங்கள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவைகளும் சாதாரணமாகிய இயற்கை யறிவிற்கும் பஞ்சேந்திரிய வுணர்ச்சிக்கும் ஒன்றோடொன்று சம்பந்தப் பட்டவைகளும் தோன்றுகின்றன. ஏன்? எவ்விதம்?......இது நிற்க, அறிவை ஆராயுங்கால் நித்திரைக் காலங்களில் அறிவு தடைப்பட்டு நிற்பது போலவும் பின்னும் விழிக்கும்போது பழைய ஞாபகங்கள் முதலிய குணங்களுடன் தொடர்ச்சியாகவும் தோன்றுகின்றதல்லவா? ஆகையால் அத்தொடர்ச்சி எவ்விதம் ஏற்படுகிறது? நித்திரைக் காலத்திலும் ஸ்வப்பனக் காலங்களிலும் சாதாரண உணர்ச்சியும் அறிவும் என்ன, எந்த ஸ்திதியா யிருக்கிறது? எவ்விதம் தடைப்பட்டுநின்றிருந்து மறுபடியும் தொடர்ச்சியாகிறது? இதுவுமல்லாமல் சில சமயங்களில், சில விடங்களில், சில சந்தர்ப்பங்களில் முன் சாதாரண இயற்கையறிவில் கண்டிராத ஸ்தலங்களும் செயல்களும் முன் சமயத்து எப்போதோ ஒரு காலத்தில், சரியாய் ஞாபகத்திற்கு வராத ஒருகாலத்தில், கண்ட ஸ்தலங்கள் போலும், நடந்த சம்பவங்கள் போலும், தோன்றுகின்றன. நினைக்குங்கால் அது சரியாக இயற்கையுணர்ச்சிக்கு முன் எப்போது நடந்ததென்று தெரிகிறதில்லை. ஆகையால் இப்பிறப்பில் நமக்கிருக்கும் அறிவு, எவ்விதமோ முன்னறிவின்(பின்) தொடர்ச்சியாகத்தோன்றுகிறதுமன்றி, சாதாரணஉணர்ச்சியற்ற ஸ்வப்பனங்களின் (கனவு) மூலமாகவும் வேறுமார்க்கமாகவும் வேறுவித அறிவுகளுடனும் ஞானத்துடனும் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. இயற்கை யறிவையும் சாதாரண உணர்ச்சியையும் தவிர இதில் சம்பந்தப்பட்ட பேரறிவு விசேஷமாகத் தோன்றுகிறது. இந்தப் பேரறிவு அடிக்கடி இயற்கை யறிவுடன் இந்தப்பிரகிருதி சம்பந்தத்திலும் அபரிமிதமாகச் சேருகிறது. இப்பிரகிருதி இயற்கையறிவு, மனுஷ அறிவு, ஒருபாகமே யாகிறது. இப்பாகம் சிறிதே, அதாவது வெளிப்படையாகச் சாதாரணமாகத்தோன்றும் அறிவு சிறிதே.இத்துடன் சம்பந்தப்பட்டபேரறிவென்று பிரத்தியேகமாக இவ் வறிவையும் சூழ்ந்துகொண்டு பெரும் பாகமாக இருக்கிறதை ஸ்வப்பனக் (கனவு) குணங்கள் முதலியவைகளால் நாம் தெரிந்துகொள்ளலாம். இயற்கை யறிவும் பஞ்சேந்திரிய உணர்ச்சிகளும் சமுத்திரத்தில் அலைகள் போலவும் பேரறிவு சமுத்திரமாகவு மிருக்கலாம். சமுத்திரம் பெரிது. அலைகள் அதிற் சிறிதுபாகமே—ஆத்ம ரகஸ்யங்களை முற்றிலும் அறிந்துகொள்வது அசாத்தியம். மழையால் சமுத்திரம் அழிந்துபோவதில்லை போலத் தோன்றுகிறதொன்று" என்றுஇவ்விதம்சொல்லிக்கொண்டிருக்கையில் மழையும் நிற்க, நான் அவ்விடம் விட்டகன்று மறுபடியும் பார்ப்பதாகச் சொல்லி உலாவத் துடங்கினேன்.

இங்ஙனம் நடந்தது ஆதி முதல் அந்தம் வரை, கனவு . கனவே!

இதில்சொல்லியிருப்பவை ஆதிமுதல்இறுதிவரை, கனவில்கண்டவை. இயற்கையில்நடந்தன்று. முழுதுங் கனவு...மழையுங் கனவே...கனவு மழையே! ....அன்றுங் கனவே...அன்று மன்றன்று... வேறொன் றன்று!

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 1. களம் 2.

[295-வது பக்கத் தொடர்ச்சி]

ராஸ்ப்பீரோ:-கசையடிக்கேயன்றி அன்பிற்கோ அசையாத ஏ பொய் பெரிதுடை யடிமையே! (1) ஊத்தையே நீயாக, உன்னை யான் மாநுடப்பரிவுடன் நடத்தி (2) என் மகவின் மானத்தைக் கெடுப்பதற்கு நீ நாடியவரையில் உன்னை என் குகையிலேயே வைத்துக்கொண்டி ருந்தேன் (3).

லிபன்:—ஓஹோ! ஓஹோ; செய் ததனைத் தீர்த்திருந்தா லாகாதா! தடுத்தனை என்னை நீ: இல்லையேல், இத்தீவினைக் காலிபன்களால் குடியமாக்கியிருப் பேனே. (4)

ராஸ்ப்பீரோ:—தீமைக்கே எல்லாம் ஒல்லுவதாகி, நன்மையின் அச்சினை ஒரு சிறிதும் ஏற்றுக்கொள்ளமாட்டாத ஏ அருவருப்புடைய அடிமையே (5). உன்மீது இரக்கங் கொண்டேன்: நின்னைப் பேசவைப்பதற்குப் பாடுபட்டேன்: நடிகைதோறும் உனக்கு ஒன்றல்லால் ஒன்று கற்பித்தேன்: உன் பொருளை நீயே உணராமல், ஏ மூர்க்கா, கடையாய விலங்கென்ன நீ பிதற்றிக்கொண்டிருந்தபோது, உன் கருத்துக்கு ஏற்ற அவைகளைத் தெரிவிக்கும் வார்த்தைகளை யான் அளித்தேன் (6). நீ கற்றாய்: ஆயினும், நற்குணங்கள் உடன்சேர்ந்து உறையமாட்டாத வொன்று உன் துஷ்ட சாதியில் இருந்தது (7). ஆதலால், சிறையினுக் கதிகமும் அடையவேண்டிய நீ, இப்பாறையுள் அடைக்கப் பெற்றது தக்கதே. (8)

லிபன்:—நீ எனக்குப் பாஷை கற்பித்தாய்: அதனால் யான் பெற்ற இலாபம் உன்னை எவ்வாறு சபிப்பதென்பதை அறிவதே. எனக்கு உன் பாஷையைக் கற்பித்ததற்காகப் பெருவாரி நோயுன்னைத் தொலைத்தொழிக்கட்டும்! (9).

ராஸ்ப்பீரோ:—துஷ்டக் கிழத்தின் கான்முளையே, (10). சீ போ! விறகு கொண்டுவா. வேறு வேலைகளுக்கு உத்தரம் சொல்ல விரைந்து செய் (11). அதுவே நன்மை உனக்கு (12). தோள்களையா குலுக்குகின்றாய் நீ, ஏ குரூரமே (13)? என் கட்டளைகளை நீ புறக்கணிப்பாயாயின், அல்லது மனமின்றிச் செய்வாயாயின், பழைய குரக்குவலியால் உன்னைச் சித்திரவதை செய்வேன்; உன் எலும்புகளிலெல்லாம் வலிகளைப்புகுத்தி நின்முழக்கினைக் கேட்டு விலங்குகள் நடுங்கும்படி உன்னைக் கதற வைப்பேன்.

லிபன்:—வேண்டா, உன்னை இரந்துகொள்கின்றேன். (ஒரு புறமாய்) நான் கீழ்ப்படியவே வேண்டும். (14). இவனது மந்திரக்கலை மிகவும் வன்மை வாய்ந்தது. என் ஆத்தாளின் தெய்வமாம் ஸெட்டிபாஸையும் அடக்கி அடிமைகொள்ளுமே அது (15).

ராஸ்ப்பீரோ:—ஆதலால் அடிமையே, அகல்!

[காலிபன் போகின்றான்]

(1) அடிக்கு அடங்கினால் அடங்குவாயே அல்லாமல் அன்பிற்கோ ஒருபோதும் நீ இணங்கமாட்டாய்—என்பது பொருள். கசை=குதிரைச் சம்மட்டி

(2) அஸஹ்யமான அழுக்கிற்கே நிகராக நீ இருந்த போதிலும் உன்னை ஓர் மனிதனாகப் பாவித்து நான் பரிவுடன் நடத்திவந்தேன்.

(3) என மகவு—மிராண்டா. பாதகனாகிய நீ அவள் மானத்தை ஒருநாள் கெடுக்க முயன்றாய். அதுவரையில் உன்னை என்னோடு இக் குகையிலுள்ளேயே வாழும்படி வைத்துக்கொண்டிருந்தேனே—என்பது பொருள்.

(4) மிராண்டாவின் மானத்தைத் தான் கெடுக்கமுடியாமற் போனதற்கே காலிபன் வருந்துகின்றான். நீ தடுக்காதிருந்தாயானால், மிராண்டாவுடன் கூடி நான் பிள்ளைகள் பெற்றுப்பெற்று இந்தத் தீவை நிறைத்திருப்பேனே-என்பது பொருள். காலிபன்களால்—எனக்குப் பிறந்த என் போன்ற பிள்ளைகளால். குடியமாக்குதல்—குடிசனங்களால் நிறையச் செய்தல்.

(5) ஒல்லுவது—இயல்வதாவது. தீமை என்பது எவ்வளவு உளதோ அவ்வளவும் செய்ய நீ ஏற்றவனாயிருக்கின்றாயே அல்லாமல், நன்மையுடன் உன்னைச் சேர்த்தாலும் அதன் அடையாளங்கூட உன்னிடம் தங்கமாட்டாமற் போகின்றதே—என்பது பொருள்.

(6) உன் பொருளை நீயே உணராமல்—நீ பிதற்றுகின்ற மொழிகளின் பொருள் இன்னதென்று உனக்கே தெரியாமல் நீ தடுமாறியபோது, உன் கருத்தைத் தெரிவிக்கத் தகுந்தபடி வார்த்தைகளும் பேச்சும் உனக்கு நான் கற்றுக்கொடுத்தேன்.

(7) பேசக் கற்றுக்கொண்டாயானாலும் நற்குணங்கள் உன்னிடம் படியவில்லை. ஏனெனில், உன் துஷ்ட சாதியின் இயற்கை, நற்குணங்கள் கூடிப் பொருந்துவதற்கு எவ்வாறு இடங்கொடுக்கும்—என்பது பொருள்.

(8) நீ செய்ய முயன்ற பாதகத்திற்கு உன்னைச் சிறையில் அடைப்பதனினும் அதிகமாகத் தண்டித்திருக்க வேண்டுமானாலும், சிறிது இரக்கத்தால், இப்பாறையில் அடைப்பதோடு விட்டேன் என்பதை எண்ணிக்கொள்—என்பது பொருள்.

(9) நீ கற்றுக்கொடுத்த பாஷையைக் கொண்டே உன்னைச் சபிக்கக்கூடியவனாகின்றேன். இதுதான் இலாபம்—என்பது பொருள். எனக்கு உரிமையான இந்தத் தீவைக் கவர்ந்துகொண்டு, அதற்கு மாறாகப் பாஷை கற்றுக்கொடுத்தாய் என்பதை எண்ணி நான் நன்றிபாராட்டமாட்டேன்—என்பது கருத்து.

(10) துஷ்டக்கிழவியாகிய ஸைக்கொராக்ஸிற்குப் பிறந்தவனே—என்பது பொருள்.

(11) வேறு வேலைகள் நீ செய்ய இருக்கிறபடியால், விறகினை விரைவிற் கொணர்ந்து சேர்—என்பது பொருள்.

(12) விரைந்து செய்யாவிட்டால் உன்னைத் தண்டிப்பேன்—என்பது பொருள்.

(18) ப்ராஸ்ப்பீரோவின் கட்டளைக்குத் தான் உடன்படவில்லை என்பதைக் குறிக்கக் காலிபன் தன் தோள்களைக் குலுக்கிக் காட்டியிருக்கவேண்டும்.

(14) அச்சமே கீழ்களது ஆசாரம் என்ற வள்ளுவர் வாக்கு இங்கு நினைவிற்கு வருதற்குரியது.

(15) ஸைக்கொராக்ஸ் ஆராதித்த தெய்வத்தின் பெயர் ஸெட்டிபாஸ். இப்பெயர் துஷ்ட தேவதையைக் குறிக்கும். அத்தெய்வத்தையே தன் அடிமையாக்கிக்கொள்ளக் கூடிய மந்திரசக்தி ப்ராஸ்ப்பீரோவிற்கு இருக்கின்றதென்று காலிபன் அஞ்சுகின்றான்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலேகளும்—30. வியாகரணம்

[291-வது பக்கத் தொடர்ச்சி]

(viii) அப்பரும் உயிரளபெடையும்

இசைக்கலேயினேடு பக்திரசத்தில் மனம்வயப்பட்டு அப்பர் பாடும்போது, ஒரு அடியின் ஈற்றிலேனும், ஒரு அடியின் அரைப் பாகத்தின் ஈற்றிலேனும் சீர் நிறைவுபெருமல் நிற்றலுமுண்டு. (உ - ம்)

ஏந்துமழு வாள ரின்னம் பரா......
　　ரெரிபவள வண்ணர் குடமூக் கிலார்
வாய்ந்தவளேக் கையாள் பாக மாக
　　வார்சடை யார்வந் துவலஞ்சு ழியார்
போந்தா ரடிகள் புறம்ப யத்தே
　　புகலூர்க்கே போயினர் போரே றேறி
ஆய்ந்தே யிருப்பார்போ யாரூர் புக்கா
　　ரண்ணலார் செய்கின்ற கண்மா யமே.

திருவாரூர் - திருத்தாண்டகம் 5.

மேற்கண்ட செய்யுளில் "பரா" "கிலார்" "ழியார்" "யமே" என்பன தேமாச் சீருக்குப் பதிலாக நிற்கின்றன. ஆயினும் இசையில் அச் சீர்கள் நிறம்பியே காணப்படுகின்றன. இது அளபெடையா என்று ஆராயுங்காலே, அளபெடை போன்றதோர் இசைத்தத்துவமேயன்றி,இவைதாம்அளபெடைகள்ஆகமாட்டா. அளபெடை பெற்றிருப்பின் "பரா" என்பது பராஅஅ எனவும், 'கிலார்' என்பது "கிலா அர்" என்றும், 'யமே' என்பது 'யமே எ' என்றும் எழுதியிருத்தல் வேண்டும்.

"நீட்டம் வேண்டி னவ்வள புடைய
　　கூட்டி யெழூஉத லென்மனர் புலவர்"

(தொல் - நூன்மரபு 6.)

அதைச் செய்யும் விதம்—

"குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கு
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே"

(தொல் - மொழிமரபு 41.)

அவ்வாறு இங்குச் செய்யாததால், அந் நிரையசைகளின் ஈற்றுயிர்கள் அளபெடை பெறவில்லை யென்பது திண்ணம். அளபெடை பெறுவதும் சந்தத்தில் அத்துணேச் சிறப்புமன்று. ஆகையால் தொல்காப்பியனுர், இசைத்தமிழின் நோக்கத்தைக் கருதி அளபெடை பெருமலே,எழுத்துக்கள் தமக்கென ஏற்பட்ட மாத்திரை அதிகரிப்பது உயிரெழுத்துக்கும் ஒற்றெழுத்துக்கும் இசையில் நேரலாமென்று, தமது எழுத்ததிகாரத்தில் நூன்மரபின் இறுதியில், தாம் பின்னர்ச் செய்யுளியலில் கூறப்புகும், "மாத்திரை யெழுத்திய லசைவகை யெனு" என்னும் விதியும் "எழுத்தள வெஞ்சினும் சீர்நிலே தானே, குன்றலு மிகுதலு மில்லென மொழிப" என்னும் விதியையும் தழுவி,

　அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலு
　முளவென மொழிப இசையொடு சிவணிய
　நரம்பின் மறைய வென்மனர் புலவர்"

(தொல். நூன்மரபு - 33)

என்ருர். இங்கு மேல்காட்டிய அப்பர் தேவாரத்தினேப் பாடும்விதம் இவ்விதிகளேத்தழுவிப் பின்வருமாருகும்:—

"ஏந்துமழு வாஅஅள ரின்னம் பராஅஅர்
　　எரிபவள வண்ணஅஅர் குடமூக் கிலாஅஅர்
வாய்ந்தவளேக் கையாஅள் பாக மாக
　　வளர்சடையார் வந்துஉஉ வலஞ்சு ழிஇயார்
போந்தாஅ ரடிகள்பு றம்ப யத்தே
　　புகலூர்க்கே போயினர் போரே றேறி
ஆய்ந்தே யிருப்பார்போ யாரூர் புக்கா
　　ரண்ணலார் செய்கின்ற கண்மா யம்மே"

என இது இசையில் நிற்கும். "வாளர்" என்பதால் "வா" வானது இசையில் இருமாத்திரை யோசையாகாது.அதற்குப்பின் அகரவோசை படிப்படியாய்க் குறைந்து கொண்டு செல்லும். ஆதலால், இவ்வோசைக்குப் பின்பற்றிவரும் அகரங்களின் மாத்திரையின் அளவு மிகவும் குன்றிய அளவாதலால் (Short vowel sound) குறுகிய உயிர்வோசைகாட்டும். ஆங்கிலபாஷையில் அதற்கு அறிகுறிகள் அவற்றின் தலேமேல்வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறே "பராஅ அர்" என்று வருகின்ற ஓசையானது "ரா" வின் ஆகாரத்திற்குப் பின்னர்க் குற்றெழுத்தாகிய அகரத்தின் ஓசை பெருது "ஆ" வென்றெடுத்த நீடல் குறுகிக்கொண்டே செல்லும். முதல் அகரத்திற்கும், இரண்டாவது அகரத்திற்கும் அவை ஒன்றன்பின் ஒன்ருய் நிற்பினும் ஒரு தன்மையாம் ஓசையில்லே. எவ்வாறெனில் ஒரு வெண்கல மணியைக் கட்டை யெடுத்து நாம் அடிப்போமாயின் அது 'டங்' என்று சப்தம் கொடுக்கும்.சற்றுநேரத்தில்அவ்வோசைநின்றவுடன், அம்மணியைச் செவியின் அருகே கொண்டுபோவோமாயின், நின்றுவிட்டதென்று எண்ணிய வோசை தொடர்ந்து சிறுத்து ஒலிப்பது காணலாம். அது போலவே இங்கும் ஓசை அளபிறந்து ஒலித்தாலும் அளபெடையாகாது.ஏனெனில் அளபெடையாயின் நெடிலுக்குப் பின்வரும் அகரம் ஒரு மாத்திரையளவு பெறவேண்டும். அவ்வாறு பெருத இசைக்கு அளபெடைக்குறி தருவது அடாதென நமது சமயகுரவர் விட்டுவிட்டனர்.

மேற்கண்ட திருத்தாண்டகப் பதிகத்தின் அலகு எவ்வாறெனின், முதல்சீரும் இரண்டாஞ்சீரும் மாங்காய்ச் சீராயும், மூன்றுவது மாச்சீராயும், நான்காவது காய்ச்சீராயும் நிற்கும். ஆயினும் காய்ச்சீருக்கு நீண்ட 'விளச்சீர்' வருவது செய்யுளில் மரபு. ஆதவால், 4-வது அடியில் 'அண்ணலார்' என்பது காய்ச்சீரிடத்தில் வந்தது காண்க. தமிழில் விருத்தங்களின் குழவிப் பருவத்தினரான நமது சமயகுரவர் காலத்தில், கூவிளச் சீருக்குப் பதிலாய்ப் புளிமாச்சீர் உபயோகப் படுத்துவதும் காணலாம். இவற்றை அப்பர் விருத்த இலக்கணங்களேக் கூறுமிடத்துவிவரிப்போம்.

ஆகையால் அப்பர் உயிரளபெடையைப் பயன்படுத்த வேண்டிய அவசியமற்றவராய்ப் பாடல்கள் பாடி வந்தாரென்பது வெளியாகும். ஆங்கிலம் முதலிய பாஷைகளின் ஓசை வற்புறுத்தல் (accent) என்று கூறப்பட்ட ஒரு தன்மை சீர்களுக்குஉண்டு. அதுவே அப்பாஷைச்செய்யுள் அலகுக்கு அடிப்படையாகும்.

அம்மாதிரி தமிழிசையில் அசையை வற்புறுத்துவது சகஜம். அப்போது நிரையசையின் ஒரு பாகமான குற்றெழுத்து, ஓசையில் தனித்துத் திகழ்ந்து நெட்டெழுத்துப்போல் ஒலி சற்றுநீண்டு தருவதால், ஒரு நிரையசையே, தேமாவாகவும் நிற்கும். மேற்கண்ட செய்யுளில் 'வலஞ்சுழியார்' என்பது ஒரு மாச்சீரும், தேமாச் சீருமாக இசையில் நடக்கவேண்டுமாதலால், 'வலஞ்சு' என்பது ஒரு சீராயும், 'ழியார்' என்பது மற்ருெரு சீருமாய் நிற்கும். 'ழியார்' என்பது இசையில் 'ழிஇயார்' என்று ஒலிப்பதால் அது தேமாப்போல் இசை கொடுக்கும். 'ழி' என்னும் எழுத்து அப்போது ஓசை வற்புறுத்தல் (accent) பெறுவது காண்க. இவ்வாறு வருவதை நமது புலவர் ஓரசைச்சீர் என்பர்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[244-வது பக்கத் தொடர்ச்சி]

பொய்யினேக் காக்கும் புந்தியு முளதோ.

'ஆனதனேத்தும்என்று அவலமுற்று இராவணன், இனி அப்பழி திருமாறு சூழ்வதற்கே மாமன்பால் தான் போந்துளன் எனப் பொய்புகலப் புகுகின்ருன். வாய்மையில், இவன் வந்தது அதற்கன்று. மானின்விழிச் சீதைவயின் வைத்தவொரு மோகத்தால் ஏவிய இவன், முன்னரே,

கரனேயுமறந்தான்தங்கைமூக்கினேக்கடிந்துநின்ரு
னுரனேயுமறந்தானுற்றபழியையுமறந்தான்வெற்றி
அரனேயுங்கொண்டகாமனம்பினுன்முன்னேப்பெற்ற
வரனேயுமறந்தான்கேட்டமங்கையைமறந்திலாதான்.

ஆனுனே யாயினும், கேட்ட அம்மங்கையை மறந்திலனுகையால், மாரீசன்முன் மீண்டும் முன்மறந்தமற்றவைகளேநினேவுபடுத்திக்கொளல் இன்றியமையாததாயிற்று. மாமனேத் தன் கருத்திற்கு இணக்கும்பொருட்டு, மீண்டுமப்பழியை உரைக்கவேண்டியதாயிற்று; கரனேக் குறித்து இரங்கவேண்டியதாயிற்று; தங்கை மூக்கினேக் காட்டவேண்டியதாயிற்று. இம்மூன்றும் அவன் மனத்தில் மறுபிறவி யெடுத்தவிது மாரீசனே இடரிற்குள் உய்க்குமொரு நோக்கமுடன் பயிலப் பெற்றன. மற்று, இவைகளேத் தொடர்ந்து இராவணன் மனத்தில் நினேவுபெற்றது மற்றையதொன்றுமுளதே. அதுதான், தங்கையின் மூக்கினேக் கடிந்து நின்ருன் உரன். இந்நினேவையோ இராவணன் தன்னுயிர் தப்புதற்குரியவோர் விழைவினிற்காதாரமாகவே பற்றிக்கொண்டான். ஆதலின்,இராவணன்மாரீசனுக்கு எடுத்தியம்பிய முறைமை இவ்வண்ணம்அமைந்திருக்கின்றது—

வன்மை தரித்தோர் மானுடர் மற்றங் கவர்வாளா
வின்மரு கிக்கு நாசி யிழக்கு நிலே நேர்ந்தார்
என்மர புக்கு நின்மர புக்கு மிதன்மேலோர்
புன்மை தெரிப்பின் வேறினி யெற்றே புகல்வேலோய்

[வேலாயுதத்தை புடைய மாரீசனே, மனிதர்களே வலிமை புடையவர்கள் என்னும்படி ஆயினர். அவர் தமது வாளினுல் உன் மருமகளாகிய சூர்ப்பணகை தன்மூக்கினே இழக்கும்படியாய நிலேமையைச் செய்தார்; தெரிவிக்குமிடத்து, என் வமிசத்திற்கும் நின் வமிசத்திற்கும் இதனேவிட அதிகமான ஓர் இழிவு இனி வேறு எவ்வாறு இருக்கக்கூடும், கூறுவாய்.]

திருகு சினத்தார் முதிர மலேந்தார் சிறியோர்காள்
பருகின ரென்ருல் வென்ற களத்தின் பழியன்ருே
இருகை சுமந்தா யினிதி னிருந்தா யிகல்வேலுன்
மருக ருலந்தா ரொருவன் மலேந்தான் வரிவில்லால்.

[சூர்ப்பணகைக்கு நேர்ந்த இழிவுபற்றி மூண்ட கோபமுடையவர்களாய் எதிர்த்துப் போர்செய்த கரன் முதலிய என் இளேஞரது ஆயுளேக் குடித்தனர் என்ருல் நாம் இதுகாறும் அடைந்திருந்த வெற்றிக்கெல்லாம் அது தான் ஒரு பெரும்பழி ஆயிற்றன்ருே ? இப்பழியைத் தீர்க்காமல் இரண்டு கைகளேயுஞ் சுமந்துகொண்டு நீ இங்குச் சுகமாக இருக்கின்ருய். வலிய வேலாயுதத்தையுடைய உன் மருமக்கள் அழிந்தனர். கட்டமைந்த வில்லினுல் ஒருவனே அவர்களேப் பொருதான்.]

வெப்பழி யாதென் னெஞ்சு
　　முலந்தேன் விளிகின்றேன்
ஒப்பழி வென்றே போர்செய
　　வொல்லே னுடன்வாழுந்
துப்பழி செவ்வாய் வஞ்சியை
　　வௌவத் துணேகொண்டிட்
டிப்பழி நின்னுற் றீரிய
　　வந்தே னிவனென்ருன்.

[கோபம் தணியாமல் நான் மனம் வாடினேன், மரணவேதனேப் படுகின்றேன். மனிதனுகிய அவன் எனக்குச் சிறிதும் ஈடானவன் அல்லன் என்பதுகருதி அவனேடு போர்செய்ய உடன்படாமலிருக்கின்றேன். மற்று, அவனுடன் வாழும். பவழமும் ஒப்பாகாமல் தோற்கின்ற சிவந்த வாயையுடையவளும் வஞ்சிக்கொடிபோன்றவளும் ஆகிய ஒரு பெண்ணே நான் கவர்ந்து வருதற்கு உன்னேத் துணேகொண்டு உன்னுல் இந்தப் பழியைத் தீர்த்துக்கொள்ளக் கருதி இங்கு வந்தேன், என்ருன்.]

ஆதலின் அவ்விராவணன்,தன் உயிர்மாட்டுத் தான் வைத்திருந்தபரிவினுல், அவ்விராமனது வரிவில்லாண்மையின் நினேவினேத் தன்னலப் பயன்பெறக் காத்துக்கொள்கின்ருன். வஞ்சியை வஞ்சித்து வௌவுதற்கே கருதுகின்றவனுகி, வில்லொன்றிற் கடிகைமூன்றில் கரனே முதலாய கணக்கில் பல்கோடி அரக்கரைவிண்ணிலே யேற்றவல்ல ஒரு மீளியை எதிர்த்துப் போர்செய்யத் துணியாதஇவன் வீரத்தினும் முன்புத்தியே மிகவுடையன். ஆயினும், இராமனுக்குத் தான் அஞ்சினுனென்றேனும் பிறன்மனே நயந்து வந்தானென்றேனும் மாமன்முன் கூறுதல் முறையன்று. இராமனேத் தான் வெல்லமாட்டாதவன் ஆகின்றநினேவால் எழுந்த பேடிச் சிற்றத்தை அங்கு அவ்வால்மீகத்தில், ஒழுக்கமிலி என்றும், கொடியோன் என்றும், இழுதை என்றும், அற்பன் என்றும், புலன்களே அடக்காதவனென்றும், தருமம் அற்றவனென்றும்; பாவியென்றும், உயிர்களே வதைப்பதே உரிய தொழிலா யுடையவனென்றும் இராகவனே யேய்வந்த வாறெல்லாம் பொருத்தஞ் சிறிதுமின்றி வைது

வைதுஒருவாறு ஆற்றிக்கொள்ள முயன்றமுழுங்கிப் பிறகு, "தனது மனைவி போய்விட்ட துயரத்தால் வருத்தமடைந்த இராமனை, நான் காரியம் நிறைவேறப் பெற்றுச் சந்தோஷமடைந்த மனத்தையுடையவனாய், வெகு எளிதாக வதைசெய்வேன்" என்று எஞ்சாது கூறிய எளிமையினிடையே தன் பேடிமையைத் தன் ஐயிரு வாய்களாலும் பிதற்றியும் விட்டனன். ஆதலாற்றான், "பேசுவதில் சமர்த்தனை மிக வலியுள்ள இராவணன்" என்று பாயிரம்பகரும் கவிக்கூற்றுடன் அவன் கட்டுரையை வான்மீகமுனிவர் துவக்கி வைக்க நேர்ந்தது ஒருகால் வஞ்சப்புகழ்ச்சியின்பாற் படுமோ என்று ஐயுறற்கிடனுகின்றது. இராமனது மனத்தை நலிந்த பிறகே அவனுடன் பொரப்புகுவது புத்தியெனச் சூழ்வான் ஒருவன் மிக்க வலியுள்ளவன் அல்லன் திண்ணம். இவ்விழிந்த எண்ணந் தோன்றினும் அதனைத் தன் புல்லிய மனத்திற்குள்ளேயே தேக்கிக்கொள்ளாமல் பறைசாற்றினனென்றால் அவன் பேசுவதில் சமர்த்தனகிய அருமையைக் காண்பது அதனினும் அரிபதாகின்றது. மற்று, பேசுவதிலும் போரிலும் சமர்த்தனை இராவணன், கழிபெருங் காமத்தால் கருத்தழிந்து இவ்வண்ணம் தன்னை இழிவுசெய்துகொண்டானென்னுமியற்கையைக் காட்டவேதானே வடநான் முனிவர் வழிசெய்தனர்!

கம்பர் நூலினும் இராவணன் வீரத்தினளவிற் சிறிதேனும் விஞ்சிய மனத்தின னல்லன்; ஆயினும் வழங்கிய வார்த்தையால், தன் கொற்றப் பேராண்மையை ஒருவாறு காத்துக்கொள்பவன்போல் தோன்றுகின்றனன். இணையலாதோரொடுஇகலுதல் இழுக்கென்னும் வீர இலக்கணத்தின்படி தன் தகவினைத் தாங்குதற்குரிய இராவணன், தம்முடைய மரபு உற்றதோர் பழியைத் தீர்ப்பதற் கொரு வழியெனும் வகையில் அம் மனிதனது மனைவியைக் கவரக் கருதினனெனச் சாற்றுமிது உரையளவில் ஒவ்வுதற்குரியதாய் நிற்கின்றது. ஆயினும் இக்காரணம் பொய்; அண்ணல் இராமனை நண்ணிப் போர்செய்ய இத்தசமுகன் அஞ்சினன் என்பதே மெய். பழிதீர்க்க அவாவினன் என்பது பொய், செவ்வாய் வஞ்சியை வெளவிப் பெண்ணாள விழைந்ததே மெய். வான்மீகத்தில் பகர்வதும் இது, கம்பரது கருத்தும் இதுவே. எனினும், மனைவியை இழந்து மனந்தளர்ந்த நிலையில் வலிகுன்றிய இராமனைத் தான் வதைக்க நினைத்தானெனச் செப்பிய அச் செத்தபாம் படிக்கும் வீரத்தின் பரிபவத்தை மறைத்து, பொய்யே யாயினும் சேவகமே செப்பும்படி இழிதகையோன் அவ்விராவணனையும் கம்பர் சிறிது உயர்ந்தவன்போல் காட்டித் தரும் இது இப்புலவர்தம் கலைநலப் பெருமைக்குவூற்ற பெற்றி அமைந்திருக்கின்றது. இராவணன் கூறிய இக்காரணம் மெய்போன்றிருப்பினும் பொய்யேஎன்றுகாட்டுவதற்குக் கம்பர்செய்கின்ற சூழ்ச்சியின் நுட்பம் கரைசெயற்கரியவியப்பினைவிளைக்குந்தரத்தது.சிறிதுபின்னர் இம்மாரீசன், இராமனது ஆற்றலையும் இராவணனது அழிவையும் அவன் செய்யநினைத்த தொழிலின் இழிவையும் வற்புறுத்தி, "அவ்வணங்கினை நீ அடையத்தான் வேண்டுவாயேல், வஞ்சித்தெய்தும் சிறுமையைச் செய்தலின்றிப் போரில் வென்றுகொண்டு உன்வீரத்தையேனும் வளர்த்துக்கொள்" என அறிவுறுத்தபோது, இராவணன், இணையிலா னொருவனொடு இகலுதலிழுக்காமென்று முன்னுரைத்த காரணத்தை, அது பொய்யே யாதலின், முற்றிலும் மறந்து, "போரிலே இராமன் இறப்பானயின் தமியளாயசீதைதானும் இறந்துபடுவாளாதலின் மாயையாற் கைப்பற்றுவதே தக்கது" என்கின்றான். தீரவேண்டுவது பழியேயாயின், சானகி சாவதால் இவனுக்கு யாதும் குறைவில்லையே. எல்லாப் பொய்யரையும்போல் இராவணனும் வெள்ளிடை மலையாய்க் கிடக்கும் இம்முரணினைக் கண்டுகொள்ளமாட்டாதவனாயினன். முரண்படப் பொய்புகல்வதில் தங்கைக்குத் தமையன்தோற்றானல்லன்.

மாயவல் லரக்கனேனும் மாரீசன் இராமனது பாணத்தால் இடிபட்டுப் பட்டுத் தூய்மையடைந்திருக்கின்றனனாதலின் இன்று புல்லிய புகன்றநின்ற தன் மருகனை மறுத்து,

மன்ன நீநின் வாழ்வை முடித்தாய் மதியற்றாய்
உன்னா னன்றி யூழ்வினை யென்றே யுணர்கின்றே
னின்னா நெஞ்ச னேனு முரைப்ப விதமென்னாச்
சொன்னா னன்றே யன்னவ னுக்குத் துணிவெல்லாம்.

[அரசனே, நீ உனது வாழ்வையெல்லாம் தொலைத்துவிடுகின்றாய். அறிவுங் கெட்டாய். இது உன்னால் உண்டானதென்று எண்ணுவதற்கில்லை; விதிப்பயனால் விளைந்ததென்றே எண்ணுகின்றேன். உனது நிலைகண்டு வருந்துகின்ற மனமுடையேனாயினும் உனக்கு நன்மையை எடுத்துக் கூறவேண்டியவனாக இருக்கின்றேன், என்று கூறி, இராவணனுக்குச் சில உறுதிமொழிகளைச் சொல்வானானான்.]

மாரீசன் அறிவுகொளுத்தும் முறை சாலச் சிறப்பு வாய்ந்தது. முதலில், நல்லதன் நன்மையை எடுத்துக் காட்டுகின்றான்; பிறகு தீயதன் தீமையை எடுத்துக் காட்டுகின்றான்; அதன் பிறகு, நன்மையுந் தீமையும் ஒருபுறமிருக்க, வரிசிலை இராமனை இகலி வாழ்தல் இராவணனாலும் இயல்வதொன்றன்று என்பதைத் தக்க சான்றுகளுடன் சாற்றுகின்றனன்.

யாப்பிலக்கணம்

[288-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள்—கலிப்பா

முந்திய இதழில் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா இன்னதென்பதைக் கற்றோம். இவ்விதழில் கிறத்தமுறையே வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா என்பதைப் பற்றிக் கற்போம்:

3. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா:—அம்போதரங்கம் என்னும் உறுப்பிற்கும் தாழிசை என்னும் உறுப்பிற்கும் இடையில் அராகம் என்னும் உறுப்பைப் பெற்று, தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்புகளையும் இம்முறையே உடையதாய் வருவது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா என வழங்கப்படும்.

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

(தரவு)

"விளங்குமணிப் பசும்பொன்னின்
விசித்தமைத்துக் கதிர்கான்ற
திளங்குமணிக் கனைகழற்கால்
துறுமலர் நறும்பைந்தார்ப்
பருஉத்தடக்கை மதயானைப்
பணையெருத்தின் மிசைத்தோன்றும்
குருஉக்கொண்ட மணிப்பூணாய்!
குறையிரந்து முன்னாட்கண்
மாயாத வனப்பினையாய்
மகிழ்வார்க்கும் அல்லார்க்கும்
தாயாகித் தலையளிக்கும்
தண்டுறை ஊரகேள்:

(தாழிசை)

காட்சியாற் கலப்பெய்தி எத்திறத்தும் கதிர்ப்பாகி
மாட்சியால் திரியாத மரபொத்தாய் காவினால் [ழிய
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள் வனப்ப
அணிநலம் தனியேகத் தருவதும் அருளாமோ?

அன்பினால் அமிழ்தளாஇ அறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப் [யாய்க்
பெருவரைத்தோள் அருளுற்ற திருளிடைத் தமியை
கருவரைத்தோள் கதிர்ப்பிக்கும் காதலும் காதலோ?

பாங்கனையே எயிலாப் பலநாளும் வந்தொழுகும்
தேங்காத காவினையும் தெளியாத இருளிடைக்கண் [யையாய்த்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் தமி
தடமலர்த்தார் அருளுரின் தகுதியும் தகுதியோ?

(அராகம்)

தாதுறு முறிசெறி தடமலர் இடையிடை
தழலெனா விரிவன பொழில்;
போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு
கருநெய்தல் விரிவன கழி;
தீதுறு திறமறு கெனநனி முனிவன
துணையொடு பிணைவன துறை;
மூதுறும் ஒலிகலி நுரைதரு திரைபொடு
கடிதொடர் புடையது கடல்.

(அம்போதரங்கம்)

கொடுந்திறல் உடையன சுறவேறு கொட்பதனால்
இடுங்கழி இராவருதல் வேண்டாவென் றிசைத்திலமோ?
கருநிறத் துறுதொழிற் கராம்பெரிது உடைமையால்
இருணிறத் தொருகாவில் இராவரல் என்றிலமோ?
[இவை நாற்சீர் ஈரடி இரண்டம்போதரங்கம்]

நாணொடு கழிந்தன்றால் பெண்ணணிமி நலத்தகையே;
நுஞ்சலும் ஒழிந்தன்றால் தொடித்தோளி தடங்கண்ணே;
அரற்றொடு கழிந்தன்றால் ஆருணும் ஆயிழைக்கே;
நயப்பொடு கழிந்தன்றால் நனவது நன்னுதற்கே.
[இவை நாற்சீர் ஓரடி நான்கம்போதரங்கம்.]

அத்திறத்தால் அசைந்தன தோள்;
அலர்தற்கு மெலிந்தன கண்;
பொய்த்துரையாற் புலர்ந்தது முகம்;
பொன்னிறத்தாற் போர்த்தன முலை;
அழலினால் அசைந்தது நகை;
அணியினால் ஒசிந்த திடை;
குழலினால் நிமிர்ந்தது முடி;
குறையினாற் கோடிற்று நிறை.
[இவை முச்சீர் ஓரடி எட்டம்போதரங்கம்.]

உட்கொண்ட தகைத்தொருபால்;
உலகறிந்த வலத்தொருபால்;
கட்கொண்டல் துளித்தொருபால்;
கழிவெய்தும் படித்தொருபால்;
பரிவுறூஉம் தகைத்தொருபால்;
படிறுறூஉம் பசப்பொருபால்;
இரவுறூஉம் துயரொருபால்;
இளிவந்த வெளிற்றொருபால்;
மெலிவுறூஉம் தகைத்தொருபால்;
விளர்ப்புவந் தடைந்தொருபால்;
பொலிவுசென் றகன்றொருபால்;
பொறைவந்து கூர்ந்தொருபால்;
காதலிற் கதிர்ப்பொருபால்;
கட்படாத் துயரொருபால்;
ஏதில்சென் றணைந்தொருபால்;
இயல்காணிற் செறிவொருபால்.
[இவை இருசீர் ஓரடிப் பதினாறு அம்போதரங்கம்.]

(தனிச்சொல்)

எனவாங்கு,

(சுரிதகம்)

இன்னதிவ் வழக்கம் இத்திறம் இவணலம்
என்னவு முன்னாள் துன்னா யாகிக்
கலந்தவள் நிலைமை யாயினும் நலந்தகக்
கிளையொடு கெழீஇய தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணியம் யாமே
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே."
[இஃது ஆசிரியச் சுரிதகம்.]

குறிப்பு:—"விண்ணோர் விழுப்பமும் வேந்தரது புகழும்
வண்ணித்து வருதலின் வண்ணகம் என்ப."
எனக் காரணக் குறியீடு செய்தனர் பிறைநெடுமுடிக் கறைமிடற்றோன் பெயர்மகிழ்ந்த பேராசிரியர்.

திருக்குறள் நீதி

காமத்துப்பால்— களவியல்

[268-வது பக்கத் தொடர்ச்சி]

1. தகையணங்குறுத்தல்

1. மயக்கியெனை நிற்பாள் மாதோமயி லணங்கோ
2. நோக்கவெதிர் நோக்குந் தாக்கணங்கோ தானையுட [ன்
3. பண்டறியேன் கூற்றமிந்தப் பெண்கொடியாள் கண் [ணினையே.
4. கண்டா ருயிர்பருகும் பெண்ணாள்பெருந்தடங்கண்.
5. கண்பிணையோ கூற்றோவிப் பெண்ணாளுக்கு மூன் [றுடைத்தே.
6. [illegible] தாமிவள்கண்.
7. கலைமுடா தாயினிவள் முலைகொல்லா நிற்குமெனை.
8. பிறைநுதலுக் கேயான் பீடழியப் பெற்றேனே.
9. நாணணியைப் பூண்டாட்கு வீணணிகள் பூட்டிய [தென்.
10. உண்டார்க் கினிதுகள் கண்டார்க் கினிதுமையல்.

2. குறிப்பறிதல்

1. நோக்குமிவள் கண்களே நோயுமதன் மருந்தும்.
2. களவிலிவள் கட்பார்வை காமத்தின்செம்பாகம்.
3. காமப்பயிர் வளர்க்குங் கண்ணொடிநைஞ் சாநின்றாள்
4. யானோக்க நிலநோக்கித் தானோக்கி நகுகின்றாள்.
5. நேர்நோக்கா தேயொருகண் சிர்நோக்கியேகுவாள்.
6. அன்பில் கடுஞ்சொல்லு மின்பமாங் காதலர்க்கு.

7. கடுஞ்சொல் வெருளிபகை காதலருக் கோர்குறி
[யாம்.
8. இரக்தவென் கண்களுக் கிசைந்தவள் நகைப்பே.
9. எதிலர்போல் நோக்குதலுங் காதலருக் குளதாமே.
10. நோக்கொக்கின் காதலர்க்கு வாக்கினலாம்பயனென்

3. புணர்ச்சி மகிழ்தல்

1. கண்டுற்றுயிர்த் துண்டுகேட்ட லொண்டொடிபா லு
[ண்டு
2. வருந்துமவள் பிணிக்கு மருந்து மவளாவாள்.
3. போகத்தவர்க் கிவள்தோள் யோகத்தவர்க் கரிது.
4. தொடக்குளிர்ந்து விடச்சுடுந் தீ மடக்கொடிக்
[குளதேயோ
5. புணர்வார் புணர்தொறும் புதிதேயிவள்போகம்.
6. அமிழ்தினு லானதோள் அணைத்துயிர் வளர்க்கும்.
7. பாத்துண் சுவையின் நேர்த்தியா மிவள்தோள்.
8. காற்றூடு செல்லாமுயக்குவேற்றுமையில்லார்விருப்பு
9. கூட லுணர்தலெமக் கடாதமுறை யென்பேன்.
10. நுண்ணறிதூ லின்பம்போல் பெண்ணிவள்
[போகவின்பம்.

4. நலம்புனைந் துரைத்தல்

1. நல்லனிச்சமே நின்னின் மெல்லியள்கா னென்
[றணைவி.
2. பலர்காணும் மலரன்று இவள் கண் ணென்னெஞ்சே.
3. மேனிதளிர் முத்தெயிறு வெய்த்தோ டவட்கு.
4. மாணிழை கண்கண்டால் நாணுங் குவளைமலர்.
5. கால்களையா வனிச்சம் கோலநுசுப் பாற்றுள்.
6. விண்மீன் மயங்கும் பெண்முகம் மதியென.
7. மாதிவள் வதனத்தே கோதில்லை மதிபோல்.
8. இவள்முகம் போலமதி ஒளிகால்வ தில்லை.
9. மலர்க்கண்ணுள் முகமொப்பின் பலர்காண
[நிற்பாயோ
10. அனிச்சமுந் தூவியு மவளடிக்கு நெருஞ்சியாம்.

5. காதற் சிறப்புரைத்தல்

1. வாலெயிறூறியநீர்பாலொடுதேன்சுவைபோலும்
2. உடம்பொடுயிர் சேர்ந்தன்ன மடந்தையொ
[டென்னட்பு.
3. கருமணிப்பாவையே போவாய் திருநுதற் கிடம்
[வேண்டும்.
4. மடக்கொடி போகம் விடக்குயிர் நட்பாம்.
5 மறந்தறியே னுகையினல் நினைந்தறியே னவளை.
6. உள்ளும் புறத்து மோவா துறைவார்.
7. கண்ணுளார் கரப்பரெனக் கண்ணுக்கு
[மையெழுதேன்.
8. நெஞ்சிற்காதலர்வேமென் றஞ்சிச்சுடுவனவருந்தேன்
9. கரப்பரென வறிந்து கண்ணிமைத்த லறியேன்.
10. உவந்துள்ளத் துறையுமவர் இகந்துறைவாரோ!

6. நாணுத்துறவுரைத்தல்

1. காமக்கடலிற் கரைகாணூர்க் கேமம்மடல்மா வல
[தில்லை.
2. உடம்புமுயிரும் மடலேறும் திடம்பெறநாணினைநீக்கி
3. பண்டேயுடையே னுணண்மை இன்றேயேறும் மடற்
[குதிரை.
4. நாணுண்மைப் புணைதப்பிக் காமக்கடலிற் புக
[விட்டேன்.
5. மடல்மாவும் மாலைத்துயரும் மடவாளே தந்தாளால்.
6. யாமப்பொழுதும் மடலேறக் காமப்பெண்ணுள் தன்
[னினைவே.
7. காமமுழக்தும் மடலேறுச் சேமப்பெண்ணிற் பெரி
[தில்லை.
8. நிறையோ வஞ்சாப் படுகாமம் மறையா துலவி
[மன்றூடும்.
9. அறிகிலரென்றேயடல்காமம் மறுகின்வெளிவந்
[துலவாநிற்கும்.
10. யாமுறுதுயரந் தாமுற்றால்யாருமறுதற் கெண்
[ணரே.

7. அலரறிவுறுத்தல்

1. அலராலென்னுயிர் நிற்பதலகோ ரறியாராதல்
[பாக்கியமே.
2. எய்தற்கரியா ளலரெற்குச் செய்தற்கரிய பே
[ருதவி.
3. ஊரலர்கேட்ட வென்னுள்ளம், பேர்பெறுபெ
[ண்டகை பெற்றற்று.
4. அலரிலை யெனிலென் காமம் நிலைகுலைவுறுமே.
5. கள்ளுங் காமமும் மிகமிக வின்பம்.
6. ஒருநாட் கண்டது ஊரறி செய்தி.
7. ஊரார்சொல்லே யெருவாகத் தாய்சொல்நீரில்
[வளரும்நோய்.
8. நெய்யாலெரியை யவிப்பாரார் மெய்யாலவியா
[தலர்காமம்.
9. அஞ்சேலென்றூர் கைவிட்டால் அலரால்நாண
[வடாதென்றூர்.
10. வேண்டில்நமக்கலர் நன்றேஆண்டகை காத்திட
[விசைவார்.

களவியல் முற்றிற்று.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :	
பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகா கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

தைலங்கள்:	
சந்தனாதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
அமிர்தாமலக "	0-12-0
பிருங்காமலக "	0-12-0
ஸ்திரீகளுக்கு	
ஸுதக டானிக்	2-0-0
கர்ப்பாசய டானிக்	2-0-0
ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 போலிகள் மொத்தம். ... மடபிருங்காமலக தைலம் ... கோரோஜனை மாத்திரை ... நஞ்சன்கூடு பண்டிட் ... தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

... ஜவரேக் ...

[பல்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முடவுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள்ள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்னம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனுக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:— அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்னம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:— உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

மானத சாத்திரம்:—(T. P. மீனுக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:— ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சந்திரசேகரன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விலகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எட்டெழுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்ரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

எமது புதிய பிரசுரங்கள்

சோவியத் ருஷியா.

இது பண்டிதர் ஜவஹரிலால் அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. எழை, பணக்காரன், ஆள்பவன், ஆளப்படுபவன், ஆண் பெண் என்னும் ஏற்றத்தாழ் வில்லாதபடி, குடிவாழ்க்கை ருஷியாவில் அமைக்கப்பெற்றுளதெனக் கூறப்படும் தற்கால ருஷியசரித்திரமாகும் இது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

இராட்டூர் வீரன் துர்க்காதாஸ்.

வங்காளக் கவி பாபு துவிஜேந்திரலால் எழுதிய நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இராஜபுத்திரர் வீரத்தையும், அவர்களது இராஜ விசுவாசத்தையும் இந் நாடகம் புலனாக்குகின்றது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

சுப்பிரமணிய பாரதியார்.

தமிழ் நாட்டின் தேசியக் கவி என்று கொண்டாடப் பெறும் ஸ்ரீமான் பாரதியாரின் நூல் ஆராய்ச்சியாகும் இது. விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

பாரதி புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

திரு அருட்பா

பி. ஏ., எம். எல்., அட்வொகேட்,
ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு
ஒன்றே
சுவாமிகள் கை எழுத்தைக்கொண்டு அச்சிட்டது!

ஆகையால், பிழை முதலிய விபரீதங்கள் இல்லாததும் நூதன விஷயங்கள் எல்லாம் கொண்டதும் இப்பதிப்பே!!

ஏற்ற பெற்றி பாகுபாடு செய்யப்பட்டு, அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு விளங்கும் இப் பதிப்பின் பகுதிகள் அடக்க விலையில் கிடைக்கும்!!!

6-வது தனிப் பாசுரப் பகுதி
(பல மத ஸ்தோத்திரங்கள்-தபால் செலவோடு 6 அணா அனுப்புதல் வேண்டும்.)

ANCIENT JAFFNA

Mudaliar C. Rasanayagam C. C. S.

An anthentic history of Jaffna based on archeological, Epigraphic and Linguistic researches.

Rs. 5 8 0 Postage extra.

KALANILAYAM
Vellala Street, Purasawalkam, Madras.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மாணிக்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துள்ளது மாணவர்களுக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணா 0-12-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

தினகரமாலை யென்னும்-தினகரவெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணா 0-6-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

வர்த்தமானம்

சைவ சித்தாந்த சபை:—குயப்பேட்டை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரால் நிறுவப்பெற்ற வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையின் வருடக் கூட்டம் சென்ற வாரம் புரசையில் ஸ்வாமி வேதாசலம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அச்சபையில் ஒருகடவுள் வழிபாடே சிறந்ததென்றும், அந்த வொரு கடவுளும் சிவம் என்றும், ஏனெனில், ஞான சம்பந்தர் அவ்வாறே கூறுகின்றார் என்றும், எனவே அதுவே முடிவென்றும், தலைவர் விளக்கினர். அறிஞர் பலரும் பேசினர்கள்.

***

4200 பவுன்:—இத்தாலியா நாட்டுக் குஸ்தி வீரரான கார்ல் நீரா என்பவர் எமிலி என்னும் மாதைக் கலியாணம் செய்துகொள்வதாக வாக்களித்திருந்தாராம். சில காலத்திற்குப் பிறகு அவர் கொடுத்த வாக்கின்படி நடக்க மறுத்தனர். அம்மாது வழக்குத்தொடுக்க, அவ்வீரர் 4200 பவுனை நஷ்ட ஈடாக அம்மாதிற்குக் கொடுக்கும்படி தீர்ப்புக் கூறப்பட்டதாம்.

***

மின்சாரப் பண்ணை:—அமெரிக்காவில் ஓர் ஊரில் கால்டுவெல்என்னும் ஓர் தனவந்தர் இருக்கின்றாராம். அவரது நிலத்தில் உழுதல் பயிரிடுதல் எல்லாம் மின்சார சக்தியால் நடக்கின்றதாம். உணவுகள் எல்லாம் மின்சார சக்தியால் சமைக்கப்படுகின்றதாம். க்ஷவரம் முதல் வெளுத்தல் வரையிலுள்ள எல்லா வேலையும் மின்சார சக்தியால் நடைபெறுகின்றதாம். எனவே அவருக்கு ஆள்கள் தேவையில்லை. இதனால் அவருக்குச் செலவும் குறைவாம்.

***

வானசாஸ்திரிகளின் முடிவு:—நமக்கு ஒளி தருகின்ற சூரியன் நிமிஷத்திற்கு 25 கோடி டன் வீதம் தனது நிறையில் குறைந்து வருகின்றது என்றும், அப்படிக் குறைந்தாலும், பூமியின் அளவுக்கு அச்சூரியன் வர 10கோடி வருஷம் ஆகும் என்றும் வான சாஸ்திரிகள் கூறுகின்றனராம்.

***

தர்ம வைத்தியசாலை:—சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் லோகோபகாரி ஆபிஸில் உள்ள சரஸ்வதி சங்க தர்ம வயித்தியசாலையில் மார்ச்சு மாதத்தில் 1728 புதிய நோயாளிகளும், 865 பழைய நோயாளிகளும் சிகிச்சை பெற்றனர் என்று தெரிகின்றது.

***

பாரிசில் பெரிய கோபுரம்:—ஐரோப்பாவிலுள்ள கோபுரங்களிலெல்லாம் உயர்ந்தது எபல் கோபுரம். அதைவிட உயரமானதும் அதிகவேலைப்பாடுடையதுமான ஒருகோபுரத்தைக் கட்டப் பிரஞ்சு இஞ்சினியர்கள் முயன்று வருகின்றனராம். 1937-ம் வருஷத்திற்குள் இப்பெரிய கோபுரத்தைக் கட்டி முடிக்க அவர்கள் உத்தேசித்திருக்கின்றார்கள். இப் புது கோபுரத்தைக் கட்டி முடிக்க 550000 பவுன் ஆகுமென்று அந்த இஞ்சினியர்கள் கருதுகின்றனர்.

கோபுரத்தின் முதல் தளம் 1640 அடி உயரமாக அமைக்கப்படுமாம். அத்தளத்திற்கு மோட்டார் வண்டியில் செல்வதற்கானபடி பாதை அமைக்கப்படுமாம். அந்தத் தளத்திலிருந்து 2300 அடி உயரமுள்ள ஒரு கோபுரம் அமைக்கப்படுமாம். அக்கோபுரத்தில் சூரிய ஸ்நானம் செய்வதற்குரிய வசதிகள் அமைக்கப்படுமாம். பாரிஸிற்கு அருகிலுள்ள ஒரு மலையில் இதை அமைக்க உத்தேசமாம்.

***

டி வாலரா:—அயர்லாந்தில் டி வாலராவின் அரசாங்கத்தில், அவரது எதிர்க் கட்சியார், வேலையில்லாமையைப்பற்றி ஒரு தீர்மானம் கொண்டுவந்தனர் என்றும், அப்பொழுது டி வாலரா, தமக்குப்போதியகாலம் கொடுத்தால் அயர்லாந்தில் வேலையில்லாமை என்ற சொல்லே இல்லாமற் செய்துவிடுவதாயும், தமது அரசாங்கத்தின் முதன்மையான நோக்கம் எல்லோரும் எங்கும் கஷ்டமில்லாமல் சந்தோஷமாயிருக்க வேண்டு மென்பதே என்றும் கூறினாராம்.

***

மேயர் உடை:—சென்றவாரம் கூடிய கார்ப்பொரேஷன் கூட்டத்தில் சென்னை மேயர் இனித் தரிக்க வேண்டிய உடை விஷயம் ஆலோசனைக்கு வந்தது. உடை நிர்ணயக் கூட்டத்தின்முன் விடுத்த சிபார்சுகள் வருமாறு:—

மேயருக்கு இரண்டு பிரத்தியேகமான உடைகள் தயாரிக்கப்படவேண்டும். ஒன்று கார்ப்பொரேஷன் கூட்டங்களில் தலைமை வகிக்குங்காலையில் போட்டுக் கொள்வதற்கும், மற்றொன்று விசேஷ சந்தர்ப்பங்களில் அணிந்துகொள்வதற்கும் என்று முடிவு செய்யப்பட்டது.

சாதாரணமாய், கார்ப்பொரேஷன் கூட்டத்திற்கு வருங்கால் ஒரு அங்குலத் தங்கச்சரிகை போடப்பட்ட கருப்புப் பட்டுக் கவுனை அணியவேண்டும்.

இரண்டு அங்குலச் சரிகையுள்ள வெல்வட் கவுன் விசேஷ காலங்களில் அணியவேண்டும்.

தலைக்கு, ஹிந்து அல்லது முஸ்லிம் தலைப்பாகை அணியலாம். அல்லது மூன்று பக்கம் முனையுள்ள கருப்புக் குல்லாய் அணியலாம். தலைப்பாகை சரிகை வேலைப்பாடுடையதா யிருக்கவேண்டும்.

மேயர் அணிவதற்கு ஒரு தங்கச்சங்கிலி செய்யப்படவேண்டும். அதை, கவுனுக்குமேல் அணியவேண்டும் மேயருக்கு முன் செல்ல 25–1–30 ரூபாய் சம்பளத்தில் ஒரு ஜமேதார் நியமிக்கப்படவேண்டும். தங்கப்பூண்போட்ட தடியொன்று 200 ரூபாய் மதிப்பில் செய்யப்படவேண்டும். அதனில் கார்ப்பொரேஷன் சின்னம் இருக்கவேண்டும்.

மேயர் உட்காரும் நாற்காலி மேலே குடைபோல் மூடப்பட்டதா யிருக்கவேண்டும்.

இச்சிபார்சுகள் சில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன. இன்னதற்காக ரூபாய் 2000 கூட்டத்தால் அனுமதிக்கப்பெற்றது.

***

பழ மார்க்கட் கட்டடம்:—சென்னையில் பச்சையப்பன் கல்லூரிக்கு எதிரில் கார்ப்பொரேஷனால் பழ மார்க்கட்டு 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப் பெற்றது. சென்ற வாரம் முதன்மந்திரி கனம் பொப்பிலிராஜா இந்த மார்க்கட்டைத் திறந்து வைத்தார்.

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம், சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில் எங்கள் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 58 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனாம்! ஆரோக்கிய கிரந்தம் இனாம்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆறெழுத்தந்தாதி:—அகத்திய முனிவர் அருளிச் செய்த இவ் வாறெழுத்தந்தாதி முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் தன்னுள் அடக்கியதென்று கருதப்படுகின்ற 100 செய்யுள்களைக் கொண்ட நூல். இது டாக்டர் V. S. அருணசலம் பிள்ளை யவர்களின் உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை அணு 12. தபால் செலவு வேறு.

பெருமாள் திருமொழி:—(குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தது.) ஸ்ரீமான் பு. ப. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள்இயற்றிய பதவுரை, இலக்கணக் குறிப்பு சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்தது. நாலாயிரப் பிரபந்தம் பயில விரும்புவோர்க்கு இது மிகுந்த உதவி தரும். விலை:-கலிகோ 1-4-0, சாதா 1-0-0. தபால் செலவு வேறு.

கலாநிலயம்
வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)